












சுமை : 41/-

# நிஷ்டை

தவிப்பு : 03

## இல்லாமை பற்றி...

தமிழ்ச்சங்கம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English
Spoken English
Advance English
General English
English for Grade 1- O/L


Maths
Maths for Grade 2-5
Maths For Grade 6-11

Science
Science for Grade 6-11

Sinhala
Spoken Sinhala
Sinhala For School Students

Computer Study
Dip- in Hardware
Dip- in Ms Office

Art
A/L Art
Art for Grade 6-11
Art for primary



STC - Sammanthurai
Art - Language

STS
Institute of Art and Language
38,40, Main Street
Sammanthurai




# கையிருப்பு...


ஆசிரியர் பீடம்

கரும்புப்பக்கம்
மலங்கழித்த பூனை போல

கதைப் பிரதி
அக்கரை அர்ஷா: அஸ்தமனம்...

கட்டுரைப் பிரதிகள்
அலியார் றியான் : அம்பாறை மாவட்ட தமிழ் இலக்கியத் தடம் – அறிமுக குறிப்பு
ஏ. சர்ஜுன் : சமாதான இயக்கங்கள்
க. இரகுபரன் : இஸ்லாமியர் – தமிழர் ஊடாட்டம்
எம்.என்.எம். சனிர் : சினிமாவும் ஒரு மெய்யியல் நோக்கு
ஏ.எப்.எம். அஷ்ரஃப் : சமகால சிங்கள சினிமா போக்குகளும் தேவைகளும்
ஆர். தௌபீக் : சங்க இலக்கியத்தில் பகற்களவு – ஓர் உளவியல் நோக்கு
தௌபீக் ஏ. றஹீம் : சமூக விஞ்ஞானங்களுடனான சமூகவியலின் தொடர்பு

கவிதைப் பிரதிகள்
மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் : பேய்களும் வெளிவரா இரவுகள்
கவிநிலா எச்.எப். றிஸ்னா : அன்பிற்கும் உண்டோ
கன்சுல் இக்ராமா : புன்னகைக்கு என்ன விலை?
நேஹா : நான்
நட்பிட்டிமுனை கஸ்பியா மஜீட் : காதல் தீ
றனூஸ் எம். இஸ்மையில் : தூக்கணாங் குருவியும்
பாலமுனை ஐயூப் : மனித நேயம்
நிந்தவூர் சிப்லி : கருக்கலைப்பு
துறையூரான் அஸாருதீன் : செந்நாத்தம்
ஜீ.எம். றுஸ்தா ஷீனா : இன்னொரு எழுச்சிக்காய்
தோப்பூர் எம்.யூ.எம். நௌபீஸ் : மின் வரவுடன்
எம்.எம்.எம். நகீபு : ஓவியம் பெய்த மழை
எல். வஸீம் அக்ரம் : கவிதைகள் 2

விமர்சனங்கள்
எல்விஸ் அதாதுர்க் : அப்துல் ரஹ்மானும் அட்டைப்படங்களும்
சற்குணராசா ஐயா : இரும்புப்போடி - ஓர் மார்க்சிய நோக்கு

இன்னும் இன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிஷ்டை

**இல்லாமை பற்றி...**

பருவகால இதழ் / தவிப்பு 03

தேடிச் சோறு நிதம் தின்று
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி மனம்
வாடப் பல பணிகள் புரிந்து
நரை கூடி கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக்கிரை யென
பின்மாயும் – பல வேடிக்கை
மனிதரைப்போல்,
நான் வீழ்வேன் என நினைத்தாயோ?
- பாரதி

இல்லாமை பற்றிய உங்கள்
தவிப்புகளை நிஷ்டையின்
இருப்பில் நிறுத்தலாம்
கவிதையாக, கதையாக, கட்டுரையாக,
இன்னும் என்னவெல்லாமாக........

**படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள்**

**சுவை 41/=**

தபால் மூலம் 50.00
காசுக்கட்டளை அல்லது
காசோலை அனுப்பி இதழைப்
பெற்றுக்கொள்ளலாம்.

2008 மார்ச்


## பிரதம ஆசிரியர்கள்

எம்.எஸ்.எம். அஸாருதீன்
எல். வஸீம் அக்ரம்
எப்.எச்.ஏ. சிப்லி
எம்.எஸ். கரீமா

## உதவி ஆசிரியர்கள்

ஆர். தௌபீக்
எஸ்.எச்.எம்.எம். சுல்பி
ஏ.எல். ஐயூப்
கே. வினோதினி

## அடையாளம்

தமிழ்ச் சங்கம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழக பூங்கா,
ஒலுவில் # 32360.
இலங்கை.
0776475398, 0713565219




**கறுப்புப் பக்கம்**

# வட மாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு பதினேழு வருடங்கள் நினைவான காயங்களுடன்

வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் பலாத்காரமாக ஆயுத முனையில் மிக குரூரமாக இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டு, இன்று பதினேழு வருடங்கள் கடந்துவிட்டன.

இந்த பதினேழு வருடங்கள் என்பது ஒரு சமூகத்தின் புலம்பெயர்வில் எளியதாக கொள்ள இயலாது. இது ஒரு சமூகத்தின் பூர்வீக இருப்பை தலைகீழாக மாற்றி, இந்த சமூகத்திற்கான எதிர்காலம் பற்றி எந்த வித கருத்தியல்களும் அற்ற காலகட்டத்தில், எந்தவித தீர்வுத் திட்டங்களும் முழுமைப் படுத்தப்படாத நிலையில் வெளியேற்றப்பட்ட பதினேழு வருடங்களும் அமைந்துவிட்டன.

இந்த துக்ககரமான நிகழ்வை ஒருபுறம் வைத்துக்கொண்டு, தற்காலத்தில் அகதி அந்தஸ்துடன் வாழும் இந்த புலம்பெயர்ந்த சமூகத்தின் இன்றைய யதார்த்தம் நிறைந்த பிரச்சினைகளுக்கான எதிர்கால சவால்களை வெற்றிகொள்ள எடுக்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் பற்றி இந்தக்கட்டத்தில் சகலரும் சிந்திக்க வேண்டும்.

தேசிய ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ நமக்கான எதிர்கால தீர்வுகள் பற்றிய தீர்க்கமான நிலைப்பாடுகள் ஏதுமற்ற அரசியல் களத்தில், எமது இந்த சமூகத்தின் வாழ்விடம், வாழ்வாதாரம், கல்வி, தொழில், சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் அங்கீகாரம் உள்ளிட்ட சொல்லில் வடிக்க முடியாத கனாக்கள் கண்முன் இன்னும் கானலாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த சமூகத்தின் பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசத்தக்கதொன்றாக கொண்டு வரப்படுதல் வேண்டும். அத்துடன் தமது தாய் மண்ணில் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நிரந்தரமாகவும் வாழ இலங்கை அரசும் சர்வதேசமும் ஆவன செய்ய வேண்டும்.

மீளக் குடியமர்த்தப்படும் போது: பாதுகாப்புடனும், கல்வி, சுகாதாரம், மின்சாரம், குடிநீர், தொழில்வாய்ப்பு இவைகள் உள்ளடங்கலாக அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படல் வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள், இழக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் முஸ்லிம்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

இதற்கான உத்தரவாதங்களை அரசும், விடுதலைப் புலிகளும், வடபகுதியில் வாழும் தமிழ் சகோதரர்களும் தர வேண்டும். இந்த உத்தரவாதத்தை சர்வதேச சமூகம் எல்லாக் காலகட்டத்திலும் அவதானித்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

*இன்னமும் கறுக்கும்...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலங்கழித்த பூனை போல...



நலமாக இருக்கிறீர்களா நண்பர்காள்...?

நலமும்தான், நலமின்மையும்தான் - எல்லோரும் சொல்லும் பதிலும் இதுதானே...
நமக்கு மட்டும் என்ன இது விதிவிலக்கா...? என்ற கேள்வியைப்போல பல்லாயிரக்கணக்கான கேள்விகள், மனிதனியல் வாழ்வில் எம்மை குறுக்கிட்டு அதிர்ச்சியில் ஆழச் செய்கிறது.
இல்லாமை பற்றிய எமது இருப்புக்களைத் தேடும் வேட்டையில், இது மூன்றாவது தவிப்பு - பரிமாணம். இருப்பினும் முற்றிலும் முன்னிரண்டிலிருந்து வேறுபட்டது - மாறுபட்டது...

எமது கன்னங்களைப் பதம்பார்க்க: பலவேறு கெட்ட குணாதிசயங்களைக் கொண்ட ரோச ரேகைகள் அழிந்த நிலையில், உள்ள கிழட்டு விரல்கள் தயாராக இருக்கிறன...
சிங்கள அகராதிகள் இன்று சிலை வேட்டையில் இறங்கியிருக்கிறன.
இஸ்லாமியத் தமிழ் எழுத்துக்களை விழுங்க நினைக்கும் சிங்கள அகரதிகாரிகள் மலங்கழித்த பூனை போல சில உண்மைகளை மண்மூடி மறைக்க, கண்மூடித்தனமான செயல்களைச் செய்கின்றனர்.
ஆனால் முள்ளுப் பொறுத்த பூனையின் வாந்தி போல எல்லா உண்மைகளும் அப்பட்டமாகும் என்பதை மறந்திட்டார்களோ என்னவோ...?

எமது தென்கிழக்குப் பல்கலையின் முகமறுவாய் அமைந்திருப்பதும், ஒரு சில கிலோ மீட்டர் தொலைவில் எமது வளாகத்திலிருந்து கால் நடையிலே செல்லும் தூரத்தில் இருப்பதுதான், முள்ளிக்குளத்துமலை.
இது சிங்கள அகரதிகாரியின் அதிகார வலையில் சிக்கித்தவிப்பது எம் அனைவராலும் உணரப் பட வேண்டியது....
இஸ்லாமியக் குமருக்கு செங்காவியடித்து, மானபங்கப்படுத்தி சேலையுரியும் நாள் இன்னும் வெகு தூரத்திலில்லை. இன்னும் இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் அவ்வளவு அழகுமில்லை...
இவ்வாறான இல்லா மெய்களின் இருப்புகள் பற்றிப் பேசுவோருக்கு எமது நிஷ்டை கண்டனச் சூடுபோட ஒருபோதும் தலை சொறியாது.
அத்துடன் உண்மையான இருப்புகளின் இல்லாமை பற்றித் தேடவும் பின்நிற்காது...

இருப்புகள் நிறைந்த, தவிப்பு நாலில் சந்திக்கலாம்...

ஆசிரியர் பீடம்



# சமூக விஞ்ஞானங்களுடனான சமூகவியலின் தொடர்பு

## An Overview of the Link of Sociology with Social Sciences

தௌபீக் ஏ. ரஹீம்.

மனித நடத்தைகளை ஆய்வு செய்யும் துறைகளினையே பொதுவாக சமூக விஞ்ஞானம் என வரையறை செய்யப்படுகின்றது. இவை மனிதனின் அகப்புற நடத்தையை அவன் வாழ்கின்ற சூழ்நிலையில் வைத்து ஆய்வு செய்கின்றன. சமூக விஞ்ஞானத்தின் நடத்தைகள் ஓர் சீர்மையானதாக இருக்காது. ஏனெனில் சமூக விஞ்ஞானத்தின் நடத்தைகளை அகவயக் காரணிகளே தீர்மானிக்கின்றன. அத்துடன் சமூக விஞ்ஞானத்தில் புறவயத்தன்மை குறைவாக இருக்கின்றது. இதில் ஆய்வுப் பொருளும் ஆய்வு செய்பவனும் மனிதனே. இச்சமூக விஞ்ஞானங்களில் சமூகவியல் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

சமூகவியல் என்பது சமூக அமைப்புக்களையும் சமூக உண்மைகளையும் அறிவியல் ரீதியாக ஆராய்கின்ற இயல் எனலாம். சமூக அமைப்பு எனும் பொழுது ஒரு சில மனிதர்கள் சில குழு ரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பார்கள். மேலும் இவர்கள் மற்ற அங்கத்தவர்களுடன் பல வகையான தொடர்பு கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதேபோன்று மனித நடத்தைகளை மனித உறவுகளின் அடிப்படையில் கற்றல் சமூகவியல் எனக் கொள்ளலாம். மனித வரலாறு ஒரு மனிதனுக்கு அவனது சமூகத்தின் மீதான கடமைகள், உரிமைகள் ஏனைய சமூகங்களுடன் அவனுக்குண்டான தொடர்புகள், அவனது கலாசாரம் அவற்றில் தாக்கம் செலுத்தும் சூழல் காரணிகள், சமூக நிறுவனங்கள், அவற்றின் செல்வாக்குகள், சமூகக் குழுக்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை சமூகவியல் ஆராய்கின்றது. சமூகவியல் தொட்டுச்செல்லாத விடயங்களே இல்லை எனலாம். சமூகவியலுக்கும் ஏனைய சமூக விஞ்ஞானங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்று நோக்குகையில் ஏனைய சமூக விஞ்ஞானங்களாக பல்வேறுபட்ட விஞ்ஞானங்கள் இருந்த போதிலும் குறிப்பாக பொருளியல், அரசியல், உளவியல், மானிடவியல், வரலாறு, கல்வியியல், தத்துவம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொருளியலை எடுத்துக் கொள்கின்ற போது "Alfred Marshal" என்ற பொருளியல் அறிஞர் "மனித வாழ்விற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதும் பயன்படுத்துவதும் பற்றிய கலையாகும்" என்றும் "Lionel Robinson" என்ற பொருளியல் அறிஞர் "அருமையானதும் மாற்றுப் பயன்பாடு உடையதுமான சாதனங்களைக் கொண்டு எண்ணற்ற மனிதத் தேவைகளை நிறைவேற்றும் மனித நடத்தை பற்றிய ஆய்வு பொருளியல் ஆகும்" என்றும் வரையறை செய்கின்றார். இக்கூற்றுக்களின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலுக்கும் சமூகவியலுக்கும் இடையிலான தொடர்புகளை அறிந்து கொள்ளலாம்.

பொருளாதார ரீதியில் சமூகவியலை நோக்குகையில் "கைத்தொழில் புரட்சி" முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றம் (Social Change) மிக முக்கியமானதாகும். பிரித்தானியாவின் கைத்தொழிற் புரட்சி அங்கு பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இப்புரட்சியினால் பொருளாதார ரீதியில் ஏற்பட்ட மாற்றம் பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலியது. மனித சக்திக்குப் பதிலாக நீர் விசையும், நீராவியும், நிலக்கரியும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு கைத்தொழிற் புரட்சி மனித மேம்பாட்டுக்கு வழிவகுத்தது.

**அதிகாரத்தில் வேறுபாடு தோன்றும் போது அரசியல் என்ற அம்சம் ஏற்படுகிறது...**
**Dowse, Hughes**

சமூகவியல் ஆய்வாளர்கள் பெரும்பாலும் களப்பணி ஆய்விலேயே ஆர்வம் காட்டுகிறார்கள். இதன்போது ஆராய்ச்சியாளர்கள் முதன்மைத் தரவுகளைப் (Primary Data) பெறுகிறார்கள். பொருளாதார வல்லுனர்கள் அவர்களுடைய ஆய்வுத் திட்டங்களுக்கு இரண்டாம் நிலைத் தரவுகளைப் (Secondary Data) பெறுகிறார்கள். அத்துடன் அதனை சார்ந்திருக்கிறார்கள். எனினும் முக்கிய ஆய்வு முடிவுகளுக்காக சமூகவியலாளர் பொருளாதார அறிஞர்களையும், பொருளாதார அறிஞர் சமூகவியலாளரையும் அதாவது ஒருவர் மற்றவரது கருவிகளையோ அல்லது தரவுகளினையோ சார்ந்திருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் "Talcott, Parsons" போன்ற சமூகவியல் அறிஞர்கள் பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகள் சமூகத்தினுடைய பிரிவு என்று வாதாடுகின்றனர். சமூகவியலுக்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள உறவினை குறிப்பிட்டுச் சொல்வதென்றால் இவை இரண்டும் இணைந்து உருவான பொருளாதார சமூகவியல் (Economic Sociology) எனும் பாடத்திட்டத்தினைக் குறிப்பிட வேண்டும். எனவே சமூகவியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையேயான உறவு என்பது ஒரு வரையறைக்கு உட்படுத்த முடியாததாகவும் இவை இரண்டும் பின்னிப் பிணைந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது.

சமூகவியலுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பினை இனி ஆராய்வோம். சமூகவியலாளர்கள் அரசியலை சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்புகளைக் கொண்டே நோக்குகின்றனர். அரசியலமைப்பானது நாட்டில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளையும், மக்களுக்கான சுதந்திரங்களையும் தெளிவாக விளக்கிக் கூறுவதோடு, அவ்வுரிமைகள் மீறப்படுகின்ற போது அவற்றிற்குத் தகுந்த பாதுகாப்பினை மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள் பற்றியும் அதன் யாப்பில் விபரித்து விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு குறிப்பிட்ட அந்நாடு பல இன மக்களை உட்படுத்திய ஒரு சமூகமாக இருக்குமானால், அங்கு வாழும் சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு வழிமுறைகளை விளக்கிக் கூறும் அம்சங்களையும் உட்படுத்தியிருக்க வேண்டும். எமது நாட்டினை எடுத்துக் கொண்டால் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரின் கோரிக்கைகள், அடிப்படைத் தேவைகள் என்பன நிறைவேற்றப்படாமையாலேயே அரசியல், இராணுவ நெருக்கடிகள் தோன்றியுள்ளன. காலத்திற்குக் காலம் தேவைகளைக் காட்டியும் சமூக மாற்றத்தை ஒட்டியும் மாற்றமடைந்து சமூக நிலைக்கு ஏற்ப வளைந்து தொழிற்படக்கூடியதாக அரசியலமைப்பு இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அது காலத்திற்கு ஒவ்வாததாய் புரட்சிகளுக்கும், ஏனைய சில முரண்பாடுகளுக்கும் வழிவகுப்பதாக அமைந்துவிடும். அறிஞர் "மெக்கலோ" கூறும்போது புரட்சிக்கு முக்கிய காரணம் என்னவென்றால் சமூகம் மாறி வளர்ந்து வரும்போது அரசியலமைப்பு மாற்றமுறாது நிலையானதாக இருப்பதாகும் என்கின்றார்.

(Political Sociology) அரசியல் சமூகவியல் என்பது அதிகாரத்தைப் பற்றிய ஒரு கற்கையே என பல சமூகவியலாளர்கள் வாதிடுகின்றனர். அதிகாரத்தில் வேறுபாடு தோன்றும் போது அரசியல் என்ற அம்சம் ஏற்படுவதாக Dowse, Hughes ஆகிய சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். பிரான்ஸ், ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளும் அரசியல் மூலம் ஏற்பட்ட சமூக மாற்றத்தைக் குறிப்பனவாகும். மேலும் சில சமூகவியலாளர்கள் சமுதாயத்தின் பல தேவைகளை நிறைவேற்றுவதாக பல அமைப்புகள் தோன்றின. அவற்றில் ஒன்றுதான் அரசு எனும் தாபனமாகும் என்கின்றனர்.

அதேபோன்று உளவியல் தொடர்பான கருத்துக்களை நோக்கும்போது தனிமனிதனின் உளவியல் நிலை குழு வாழ்வோடு தொடர்புடையதாய் உள்ளது. ஆதேபோல் தனிமனிதனின் மனம் குழுவின் மேல் செலுத்தும் செல்வாக்கு மிகவும் முக்கியமானதாகும்.

இந்தவகையில் சமூகவியலும் உளவியலும் தொடர்புடையதாக உள்ளது. மேலும் உளவியல் என்பது உளத்தொழிற்பாடு, உளக்கிடக்கை, உளநடத்தை போன்றவை பற்றிய ஒரு ஆராய்ச்சிக்கல்வியே உளவியல் ஆகும். நடத்தைவாத உளவியலாளர்கள் உளவியலை நடத்தை பற்றிய ஆய்வு என வரையறை செய்கின்றனர். மேலும் உளவியலில் மனித நடத்தையைத் தீர்மானிக்கும் காரணிகளை இயற்கை விஞ்ஞான தொழில் நுணுக்க முறைகள், பரிசோதனை போன்றவற்றின் ஊடாக ஆய்வு செய்யமுடியாது. இந்நிலையில் உளவியலில் வினாக்கொத்து முறை, தனியாள் ஆய்வுமுறை, பேட்டி முறை, கள ஆய்வு முறை, புள்ளிவிபரவியல் போன்ற சமூக விஞ்ஞான முறைகளே கையாளப்படுகின்றன. இதன்மூலம் சமூகவியலும் உளவியலும் ஒரு பாகமாகிறது. அதேசமயம் சமூகவியலும் உளவியலும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு உள்ளன. ஆதாரமாக!

➢ சமூகவியலானது குழு நடத்தை பற்றிப் படிக்கின்ற அதேவேளை உளவியலானது குழு நடத்தைகளின், தனிமனிதனின் நடவடிக்கையை ஆராய்கின்றது.

➢ உளவியலானது தனிமனிதர்களின் மனப்பான்மைகளையும், சமூகவியல் மனப்பான்மைகளுக்கு காரணமான சமூக சட்டங்களையும் படிக்கின்றன.

➢ உளவியல் மனதில் எண்ண ஓட்டங்களையும், சமூகவியல் சமூக நடவடிக்கைகளையும் கவனத்தில் கொள்கின்றன.

அதேபோன்று கல்வியைக் கருத்திற் கொண்டால் சமூகத்திற்கு ஒரு ஸ்தீரத் தன்மையை வழங்குவது கல்வியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திலுள்ள அங்கத்தவர்களிடையே ஒத்த தன்மை காணப்படும்போதே அச்சமூகம் நிலைத்திருக்க முடியும். இதனைப் பாடசாலைகள் கல்வி மூலம் வழங்குகின்றன. குடும்பத்தினாலோ ஒத்த வயது குழுக்களினாலோ செய்ய முடியாத பங்களிப்பை பாடசாலை செய்கின்றது. மாணவர்களுக்கு அவர்களுடைய சமூகத்தின் வரலாற்றினை கற்பிப்பதன் மூலம் அவர்களுக்கு அவர்களின் சமூகத்தின் மீதுள்ள கடமைகளை உணர வைப்பது இலகுவானதாகும்.

பிரான்ஸின் சமூகவியலாளரான எமில் துர்கைம் (Emile Durheim) என்பவரது இக்கூற்றினை பின்வரும் உதாரணம் மூலமாக விளங்கலாம். அமெரிக்காவின் கல்வி முறையில் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களது நாட்டின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த பெரியார்கள், கறுப்பின மக்களை பிரதிநிதித்துவம் செய்து சம உரிமையை ஏற்படுத்திய ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln) போன்றோரின் வரலாறுகள், அந்நாட்டின் அரசியல் அமைப்பு என்பவை கற்பிக்கப்படுவதால் அம்மாணவர்கள் எவ்வித பேதமுமின்றி அவர்களது சமூகத்திற்காக தொழிற்படுபவர்களாக உருவாக்கப்படுகின்றனர். அவர்கள் தங்களது பாடசாலை வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது இந்த உறுதியை எடுத்துக்கொள்கின்றனர்.

கல்வியானது ஒவ்வொருவருக்கும் எதிர்காலத்தில் அவர்கள் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கான திறமைகளைக் கற்பிக்கிறது. ஆரம்பகாலங்களில் கல்வியறிவற்ற சமூகங்களில் இளம் வயதினர் அறிவினையும், திறமையினையும் தங்களது பெற்றோரைப் பின்பற்றிப் பெற்றுக்கொண்டனர். அதாவது ஆண்பிள்ளைகள் தந்தையைப் பின்பற்றி வேட்டைக்குச் செல்ல, பெண்பிள்ளைகள் தாயைப் பின்பற்றி உணவு தயாரித்தல், மரக்கறி சேகரித்தல் போன்ற வேலைகளைச் செய்தனர். மதகுருமாரும் செல்வந்தர்களின் பிள்ளைகளும் மாத்திரமே சிறிதளவு கல்வியறிவினைப் பெற்றிருந்தனர். கைத்தொழில் மயமாக்கலின் பின்னரே கல்வி அறிவு பரவலாக வழங்கப்படுகிறது. பாடசாலையின் முழுமையான பயனை அடைந்த ஒரு பிள்ளை தனது சமூகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே சமூகவியல் இவ்வாறாக சமூக விஞ்ஞானங்களுடன் தொடர்பினைக் கொண்டுள்ளதுடன் இவைகள் ஒன்றிற்கொன்று ஏதோ ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்பட வேண்டியது என்பது இன்றியமையாதது எனலாம்.

**உசாத்துணை நூல்கள் :**


01. கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து "சமூக விஞ்ஞானங்கள்" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

02. கலாநிதி எஸ்.கே.எஸ். நாதன் "அரசியல் சமூகவியல்" யாழ் பல்கலைக்கழகம்.

03. Ritzer George "Classical Sociological Theories"Mcqraw Hill INC 1992

04. Sorokin, Pitirion "Contemporary Sociological Theories"New York 1928

05. Blerstedt, Robert "American Sociological Theories" A critical History New York Academic Press - 1981



இல்லாமை பற்றிப் பேசுக
உங்கள் நிழலையில் நீங்களும் ...





## எல்.வஸீம் அக்ரம் கவிதைகள்

01. வானம் வாடாதிருக்கும்
வேளையொன்றுக்காக காத்திருக்கிறேன்..

மழைவிட்ட பின்னரான மென்னழகில்
பூமி படுத்திருக்க ஓடும் நீரின் இசை
தணியாத வேட்கையில் நான்
புவியெங்கும் நடக்க
சுவாசிக்கப்படாத மொழியில்
பூபாள ராகம் பாடும் காற்று...

இத்தனையும் இற்றுப்போன பொழுதில்
சுமைகளில் கரைந்த மனதில்
மௌனத்தினை தேடுகிறேன்...
நாகரீக சிருஷ்டிப்பின் நிர்வாணம்
சோரம்போக
ஸ்பரிச தரிசனம் தரத்துடிக்கிறது
இரவின் முகம்...

பசியால் உடற் சுவர்கள் நிற்க மறுக்கும்
எனக்கான பாதுகாப்பில்
உலகமயமாதலை வேண்டித்
தொலைகிறேன்



சவர்க்காரப்பெட்டியில்,
முகச்சவரத்தில், தேனீர்
கோப்பையில்,பேனையில்,தட்டில்..
என்று விரியும் பெயர்ப்பட்டியலில்
நீ நுழைந்த பின், நான் ...?

விதியின் மீது கவிதை படித்து
காலத்தின் ஆக்கிரமிப்பு சுரண்டலை
உனக்கு ஒப்பமிட்டிருக்கும்
வாசகங்களை பிரகடனம் செய்யும்
ஏழ்மை முகத்தின்
யதார்த்தம் நிறைந்த தோல்வி குறித்து
விபச்சாரி முறையிடுகிறாள்
அழகான பிச்சைக்காரனிடம்

மூன்றாம் மண்டல அடைவுகளுடன்
உலகமயமாதல் பிரமித்து அமர்கிறது
ஏழ்மை இறுக கட்டப்பட்ட
விவாத அரங்கில்

02. சுமைகளுடன் பயணிக்கும்
திராணியிழந்த என் சுவாச வாடையை
அளந்திருப்பாய் என்று
சத்தியமாய் நம்பவில்லை ...

என் சுகம் விசாரித்து
இறுக்கமாய் என் இதழ்களை தடவி
நிமிடங்களை சந்தோசித்து
நகர்த்திய காலங்கள்
காலாவதியாகிவிட்டன.

இப்பொழுதுகளில்
உயிரே அடங்கிவிடும்
விகாரம் பூண்ட உன் முகத்தின்
அடையாளத்தை காணும்போது ...

என் விழிகள்
பீதியால் சோர்ந்துவிடுகின்றன.
நீ என்னருகில்
இல்லாதபொழுதைத்தவிர
வீட்டுக் கதவில் நீ அறைகிற
குரலின் அதிர்வால்
தூர்ந்துவிடுகின்ற
ஆத்மாவின் இரைச்சலை
சயனத்துடன் பாடுகிறேன்.

என் உடல்மீதான ஆக்கிரமிப்பை
தகர்த்தெரியும் உந்துதலை
நீ லாபகமாக கைப்பற்றிவிட்டு
என் இயலாமையினை வம்சிக்கிறாய்

ஆறுதல் கனிந்த
பிள்ளைகளின் வார்த்தைகளை
துழாவுகிறேன்
இல்லம் முழுதுமாய்
சுயம் பறிபோன தடுமாற்றத்தில் மனது
சமயலறையின் தட்டுக்களில்
விடுபட்டு ஒழுகும் கண்ணீரில்
நனைந்திருக்கும் என் ஆடைகள்
இனி யாரிடம் போய் முறையிடும்?

துவாரம் தெரியாத இருப்பிடத்தில்
காற்றை உள்வாங்கும் காலமெல்லாம்
உன் (அ)ராஜகம் கருக்கட்டியிருக்க
கவலை செறிந்து கழிகிற கணங்களுடன்
உயிரின் புள்ளியை அடைகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சிங்கள சினிமா போக்குகளும் தேவைகளும் - ஓர் அறிமுகக் குறிப்பு

ஏ.எப்.எம் அஷ்ர.்.ப் சிரேஷ்ட விரிவுரையாளர்

> **காலத்தின் தேவை உணர்ந்து செயற்படுவதன் மூலமே சிங்களத் திரைப்படத்துறை மீளவும் எழுந்து நிற்க முடியும்.**

உன்னதமான தொலைக்காட்சி நாடகங்களை வழங்கி வரும் பெருமை எப்போதுமே சிங்களத் தொலைக்காட்சி நாடகத்துறைக்கு உண்டு. யதார்த்தத்தை இயல்பாகவே எடுத்துக்காட்டுகின்ற பண்பே, பெரும்பாலும் சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களின் வெற்றிக்குக் காரணம் எனலாம். பேராசிரியர் எதிரிவீர சரத்சந்ரவின் 'மனமே', 'சிங்கபாகு' முதலான மேடை நாடகங்களின் வெற்றியோடு சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களும் வளர்ச்சி கண்டு வந்திருக்கின்றன. அவ்வகையில் 'தூதருவோ', 'அசல் வெசியோ', 'எல்ல லங்க வளவ்வ', 'துங்கிந்த அத்தர', 'தியக்கெட்ட பஹன' முதலான நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இன்றைய தமிழ் அல்லது அது போன்ற வேற்றுமொழித் தொலைக்காட்சி நாடகங்களைப் போன்று பொருளீட்டலை அடிப்படையாகக் கோள்ளாமல், கலை நோக்கில் வேளிவந்த நாடகங்கள் இவை. சமகாலச் சிங்களக் குடும்பங்களில் நிலவிய குறைபாடு களையும் சமூதாய நோக்குகளையும் போக்குகளையும் யதார்த்தமாக இவை வெளிப்படுத்தின.

காதல், வீரம் போன்றவற்றை குறிப்பிடுவதாய் வெளிவரும் பாலியல, வன்முறை முதலான, மக்களின் கேள்வி(Demands)களை நிவர்த்திக்க முனையும் இன்றைய தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களைப் போலல்லாது, மக்களிடம் சென்று சேரவேண்டிய நல்ல விடயங்களைப் பற்றியே அவை உரையாட விரும்பின. எனினும், மிக அண்மைக்காலமாக சிங்களத் தொலைக்காட்சி நாடகத்துறையில் இந்தியக் கலைஞர்களின் வருகையினாலும் பங்களிப்பினாலும் தமிழ்த் தொலைக்காட்சி நாடகத்துறையின் சாயல் அல்லது இந்தியத் தொலைக்காட்சி நாடகத்துறையின் சாயல் படியத் தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் 'காவ்யா', 'வசுந்த்ரா', 'கௌத்தமி', 'சக்கலக்க பேபி', 'பிரெண்ட்ஸ்' முதலானவை குறிப்பிடத்தக்கவை. இந்நிலை வருந்தத்தக்கதே. இவ்வாறான நாடகங்களின் வருகை சிங்களத் தொலைக்காட்சி நாடகத்துறையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடலாம்.



ஏற்கனவே வீழ்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் சிங்களத் திரைப்படத்துறையின் நிலைமையே, சிங்களத் தொலைக்காட்சி நாடகத்துறைக்கும் ஏற்படலாம் என்பது கவனத்திற்குரியது.

மிக அண்மையில் வெளிவந்த லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 'அம்மாவருனே' போன்ற மிகச்சிறந்த திரைப்படங்களை ஆரம்பகாலத்திற் தந்த சிங்களத் திரைப்படத்துறை, இன்று மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை கவலைக்குரியது. இடையிடையே 'சரோஜா', 'தனித்தட்டுவென் பியாம்பன்ன', 'அம்மாவருனே', 'சங்காரா', 'சங்க்ராந்தி' முதலான நல்ல திரைப்படங்கள் வெளிவந்தாலும், இன்றைய சிங்கள சினிமாத்துறை கோமாளிகளின் கைகளில் சிக்கியிருப்பது தெரிகிறது. 'பிஸ்ஸு டபள்', 'பிஸ்ஸு ட்ரிபள்', 'பிஸ்ஸு பூஸோ', 'ஹொந்த ஹித்த பிஸ்ஸோ', 'வெடபெரி டார்ஸன்' முதலான பைத்தியத்தனமான திரைப்படங்களே இன்றைய சிங்கள சினிமாத்துறையை ஆக்கிரமித்துள்ளன. மிகச் சிறந்த சிங்களத் திரைப்பட நடிகர்கள் கூட சிறந்த கதை அமையாமையின் காரணமாக கோமாளிகளாக நடிக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களுள் ரஞ்சன் ராமனாயக்க, லக்கி டயஸ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலகநாடுகள் எதிர்கொண்டுள்ள அரசியல், சமூக, பொருளாதாரக் குறைபாடுகளை, அச்சுறுத்தல்களை அல்லது அவை தொடர்பான விடயங்களை மக்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், அவை பற்றிய எவ்வித உணர்வும் இல்லாமல் இலங்கையில் சிங்களத் திரைப்படத்துறை செயற்படுவது மிகுந்த கவலைக்குரியது. இதற்கு மாற்றமாக, தமிழ்த் திரைப்படத்துறையினர் காலத்துக்கேற்றவகையில் சினிமாவை ஓர் ஊடகமாகப் பயன்படுத்த முனைந்திருப்பது கவனத்திற்குரியது. தமிழ்த் திரைப்படங்கள் மட்டுமல்ல ஏனைய பல மொழிகளிலுங் கூட, அவரவர் சார்ந்த பிரச்சினைகள், உணர்வுகள் சினிமாவை ஊடகமாகக் கொண்டு பகிரப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அவ்வகையில் ஈரானியத் திரைப்படங்களும் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்த் தொலைக்காட்சி நாடகத்துறை பெரும்பாலும் யதார்த்தத்துக்கு முக்கியத்துவமளிக்காது செயற்பட்டாலும் தமிழ்த் திரைப்படத்துறை பலருக்கும் முன்மாதிரியாகச் செயற்படுவது பாராட்டுக்குரியது. சமகால அரசியல், சமூக, பொருளாதார நடைமுறைகளையும் குறைபாடுகளையும் சரியாக உள்வாங்கிக் கொண்டுள்ள தமிழ்த் திரையுலகு பொருத்தமான விதத்தில் எதிர்வினையாற்றுவது கவனத்திற்குரியது. காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்ட பாலியலையும் வன்முறையையும் அடிநாதமாகக் கொண்டாலும் சமூக, அரசியல், பொருளாதார மாற்றத்துக்கான முன்மொழிவுகளையும் தமிழ்த் திரைப்படத்துறையினர் பகிர்ந்து கொள்கின்றனர். இது வரவேற்கத்தக்கது. அவ்வகையில் சிறப்பான ஆட்சியை முன்மொழியும் 'முதல்வன்', நீதித்துறையின் உதவியோடு மக்களிடையே அரசியல் - உரிமை விழிப்புணர்வைப் பகிர்ந்து கொள்ளும் 'தமிழன்' முதலான திரைப்படங்கள் பாராட்டுக்குரியவை வரவேற்கத்தக்கவை.

வெறும் கோமாளித்தனங்களை புறந்தள்ளிவிட்டு சிங்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத்துறையும் இவ்வாறான விடயங்களை தமிழ்த் திரைப்படத்துறையினரிடமிருந்து உள்வாங்கிக் கொள்ள முனைய வேண்டும். காலத்தின் தேவையுணர்ந்து செயற்படுவதன் மூலமே சிங்களத் திரைப்படத்துறை மீளவும் எழுந்து நிற்க முடியும். மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் சீரழிந்து கொண்டிருக்கும் இலங்கைச் சமுதாயத்தைச் சரியாக வழிநடத்தவும் தடம்புரண்டிருக்கும் இலங்கையின் அரசியற் களத்தை சீர்படுத்தவும் மக்களை இலகுவில் சென்றடையும் ஊடகம் என்ற வகையில் சிங்களத் திரைப்படத்துறையினரின் பங்களிப்பு அவசியமானதும் மறுக்க முடியாததுமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை இதனூடாகப் பகிர்ந்து கொள்ளவும் முடியும். தடம் புரண்டிருக்கும் சிங்களத் திரைப்படத்துறை இவ்விலக்கு நோக்கிப் பயணிப்பது காலத்தின் கட்டாயமுமாகும்.

## ஓவியம் பெய்த மழை



வீட்டுச் சுவரில் தொங்கிய
என் மேக ஓவியம்
புகைபிடித்துப் போய்
மழை இருட்டியிருந்தது..

நெருப்பு சீறிச் சினந்து
வீடு வீடாக
விசாரணை நடத்திக் கொண்டிருந்தது..

நேற்று என்னோடு சிரித்தவளின்
ஈரமாய்க்கிடந்த பாதச்சுவடுகளை
அள்ளுகிறேன்
நெருப்பில் வெந்த
கொப்புளமாயல்லவா உடைகிறது...

வாப்பா உம்மா மக்களென்று
ஒரு குடும்பம் மூட்டிய விறகுகள் போலல்லவா
எரிந்து கிடக்கிறார்கள்..

துப்பாக்கிக் குண்டுகள்
என் தோள்களின் மீது
நண்பனைப் போலல்லவா
வந்து உசுப்புகிறது..

வீட்டுச்சுவரில் தொங்கிய
என் மேக ஓவியம்
இப்போது
நெருப்பாயல்லவா
பெய்து கொண்டிருக்கிறது...

எம்.எம்.எம். நகீபு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர் - தமிழர் ஊடாட்டம்



க. இரகுபரன்
மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர்.

பல்வேறுபட்ட மதப்பண்பாடுகளை பிரதிபலிக்கும் செவ்விலக்கியங்களைக் கொண்டதாயும் அம்மதங்களை அனுஷ்டிப்பவர்களால் உரிமை பாராட்டப்படுவதாயும் அமையும் சிறப்பு, தமிழ் மொழிக்கு உண்டு. இச்சிறப்பு உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிப் பெரும் சிறப்பு என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வுண்மையை மனங் கொள்ளும் போது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடத்தொன்மை வாய்ந்ததும் இன்றைக்கும் தமிழ்ச் சமூகத்தின் கோட்பாட்டு வாசகமாக முன் வைக்கப்படுவதுமான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உளப்பாங்கின் நடைமுறைச் சாத்தியப்பாட்டை வெற்றியை உணர்ந்து கொண்டவர்களாவோம்.

இந்தியப் பண்பாட்டு வட்டத்துள் முகிழ்த்த சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலான மதங்களும் இந்தியாவுக்குப் புறம்பான பண்பாட்டுச் சூழலிலே தோன்றி, பிற்காலத்தே வந்தடைந்த இஸ்லாம், கிறிஸ்தவம் என்பனவும் அவற்றின் உட்பிரிவுகளுமாக பல்வேறு மதங்கள் தமிழை வளப்படுத்தின. பல்வேறு மதங்களைத் தமிழ் வளப்படுத்திற்று.

இவ்வுண்மையை வலியுறுத்தும் போது, வேறொரு விடயத்தையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும். அதாவது ஒவ்வொரு மதமும் தத்தமது கோட்பாடுகளைப் பயில்வதற்கும் பரப்புவதற்கும் உரிய ஊடகமாக மாத்திரம் தமிழைக் கொள்ள வில்லை. மாறாக பிற மதங்களைக் கண்டிப்பதற்கும் வீழ்த்துவதற்குமான சாதனமாகவும் தமிழைக் கையான்டன. தத்துவ சாஸ்திர நூல்களில் அமைந்த பலபக்கங்கள் மாத்திரமன்றி, கோத்திர நூல்கள்கூட பரமத விரோத மனப்பான்மை உடையனவாய் அமைந்தமையைத் தமிழிலக்கிய பரப்பிலே பரக்கக் காணலாம். முன்னைய காலத்தில் வைதிக, அவைதிக மதங்களிடையேயும், பின்னைய காலத்தில் சைவ, கிறிஸ்தவ மதங்களிடையேயும் எழுந்த கண்டன இலக்கியங்கள் வெகு பிரசித்தமானவை.

அத்தகு கண்டன இலக்கியங்களால் தமிழுக்கு தர்க்கரீதியான நடைவிருத்தி, வசன நடைவிருத்தி என்று இன்னோரன்ன சில நன்மைகள் கைகூடின என்பது உண்மையே.



ஆயினும், அவற்றுட் பயின்றுள்ள மதரீதியான விரோத, குரோத மனப்பாங்குகள் இன்றைய நிலையில் பாராட்டுக்குரியன என்பதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும். சமூக நல்லிணக்கம் அல்லது குறைந்தபட்சம் சமூகங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மை என்பது உலகினில் நவீன காலத்திலேயே பெரிதும் சாத்தியப்பட்டன.

நவயுகத்தில் உலகம் போற்றத் தலைப்பட்ட முற்போக்கான விடயங்களுள் அத்தகைய சகிப்புத்தன்மை மிக முக்கியமானது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய ஓட்டத்தை உன்னிப்பாக அவதானிப்பவர்கள். ஆது எவ்வாறு கடுமையான சமயப் போட்டியிலிருந்து சமயப் பொறாமையை நோக்கி நகரத் தொடங்குகிறது என்பதைக் கண்டு கொள்வார்கள். சமயரீதியான முரண்பாடுகளை அநாகரிகமானவையாகக் கண்டு வெறுத் தொதுக்கும் போக்கு நவீன தமிழிலக்கிய உலகுகண்ட நல்விருத்தியாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இஸ்லாம் - தமிழ் இலக்கிய ஊடாட்டத்தை நோக்கும் போது மிக முக்கியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான ஓர் உண்மை புலனாகின்றது. இஸ்லாத்துக்கு விரோதமான குரல் எதுவும் தமிழுலகின் பழைய மதங்களுக்குரிய இலக்கியங்களிலோ காணப் பெறவில்லை என்பதே அவ்வுண்மையாகும். தமிழ் நாட்டுக்கு வடக்கேயுள்ள சில மொழிகளின் இலக்கியங்களில் அத்தகைய எதிர்ப்புக்குரல்கள் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன என்பதையும் இங்கு மனங்கொள்ள வேண்டும். இவ்வுண்மையை அறியும் நிலையில் நாம், இஸ்லாம் தமிழுலகில் பரவிய முறைமையை தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தேறிய இஸ்லாமியப் பாரம்பரியத் தன்மையை உணரக் கூடியவர்களாவோம், ஆய்வாளர்கள் கூறுவதுபோல."இவர்கள் (இஸ்லாமியர்கள்) கிறிஸ்தவர்கள் ஆரம்பத்தில் இருந்தது போன்று திணிக்கப்பட்டவர்களாக வாழாமல் முதலிலிருந்தே இணைந்தவர்களாக வாழ்ந்தனரென்பது மனத்தே நிறுத்தப்பட வேண்டிய உண்மையாகும்" இந்த இணைவு ஒரு வழிப் பாதையாலன்றி இருவழிப்பாதையால் நிகழ்ந்தது என்றே கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் தேற்றத்திற்கு நெடுங்காலம் முன்பதாகவே அராபியர்கள் வணிக நோக்கிலே தமிழ் நாட்டுக்கு வந்து அங்கே குடியிருப்புக்களையும் அமைத்துக் கெண்டார்கள். யவனர் என்னும் சொல் கிரேக்கரையோ, ரோமரையோ, அன்றேல் அராபியர் களையோ ஒரு வேளை அம்மூவரையுமோ குறிப்பதாய் இருக்கலாம். ஆனால், அந்த யவனரும் பிறருமாகிய வெளிநாட்டவர்கள் தமிழக நகரங்களிலே கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பதாகவே குடியேறத் தொடங்கிவிட்டார்கள். அக்குடியிருப்புக்கள் பற்றிய சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பதிவு ஒன்று அவதானிப்புக்கு உரியது."புலம்பெயர் மக்கள் கலந்து இனிது உரையும் முட்டாச்சிறப்பிற் பட்டினம்" (பட்டினப்பாலை: 217, 218) புலம்பெயர் மக்களாகிய வெளிநாட்டவர்கள் கலந்து இனிது உரைக்கின்ற சமூதாய நிலைமை அக்காலத் தமிழுலகில் அமைந்திருந்தது. அல்லது அவ்வாறாக வெளிநாட்டவர்கள் கலந்து இனிது உரைக்கின்றமை இலட்சியப் பூர்வமானதாகக் கருதப்படடிருக்கிறது எனலாம்.

இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் இஸ்லாமியர்களாக வந்த அராபியர்களும் இத்தகைதொரு சுமுகமான சமூகச் சூழலையே தமிழகத்தில் அநுபவித்திருக்கிரார்கள். மாணிக்கவாசகர் காலம் முதலாக அல்லது அதற்கும் சிறிது முன்பான காலம் தொடங்கி இஸ்லாமியர் படையெடுப்புக்குப் பின்னருங்கூட இத்தகைய சுமுகச் சூழ்நிலை தமிழுலகில் நிலைவிற்று என்று கொள்வதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அச்சான்றுகளுள் முக்கியமானது, இரண்டாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் ஆட்சிக்காலத்துக் (கி.பி.1238- 1251) கல்வெட்டு ஒன்றாகும் (S.l.l. VoL. Vlll No. 402) அக்கல்வெட்டில் அம்மன்னன் இஸ்லாமியப் பள்ளிவாசல் ஒன்றுக்கு நன்கொடை வழங்கினான் என்ற செய்தி அமைந்துள்ளது. அக்கல்வெட்டில் 'கீட் செம்பிநாட்டுப் பௌத்திர மாணிக்கப் பட்டினக் கீழ்பாழ் சோனகச் சாமந்தப்பள்ளியான பிலால்ப்பள்ளி' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்து மன்னர்கள் இஸ்லாமியர்களை அரவணைத்து நடந்ததற்கான சான்றுகள் முன்பு குறிப்பிட்டது போல, கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதலாகவே உண்டு. அதுபோல வணிகர்களாகவும் நிலக்கிழார்களாகவும் விளங்கிய இஸ்லாமியர்கள் இந்து மதத்தை அநுசரித்து நடந்தமைக்கான சாசனச் சான்றுகளையும் அறிஞர்கள் கண்டு காட்டியுள்ளார்கள்.

தமிழரும், இஸ்லாமியரும் இவ்வாறாகக் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த தன்மையை பல்வேறு அம்சங்களிலும் கண்டு கொள்ளலாம். உதாரணமாக மொழி அடிப்படையில் நோக்கும் போது இஸ்லாமியர் வழியாகத் தமிழ் உள்வாங்கிக் கொண்ட பிறமொழிச் சொற்கள் பலவுள்ளன. இந்த இடத்தில் இஸ்லாமியர்கள் தமிழிலிருந்து தம்முடையதாகத் சுவீகரித்துக் கொண்ட இரு சொற்களைக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும் ஒன்று பள்ளி, மற்றையது நோன்பு. பள்ளி என்ற சொல் சங்ககாலம் முதலாகவே தமிழிற் பயின்று வந்த ஒரு சொல்லாகும். அச்சொல்லுக்குத் தமிழிலே ஒரு வரலாறு உண்டு. அது படுக்கை,வணக்கஸ்தலம், பாடசாலை என்ற பல பொருண்மைகளைத் தனது வரலாற்றிற் கண்டுள்ளன.

வணக்கஸ்தலம் என்ற பொருளில் அச்சொல் அவைதிக மதங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பிற்காலத்தில் அச்சொல் அப் பொருண்மையை இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்ட நிலையிலேயே கொள்ளலாயிற்று என்பது கருதத்தக்கது. இவ்வரலாற்றின் தொடக்கத்தை மேற்குறித்த மாறவன்மன் சுந்திரபாண்டியனின் கல்வெட்டிலே காணக்கூடியவர்களாகின்றோம். நோன்பு என்பதும் அவ்வாறே அது ஆண்மீக சம்பந்தமாய் வழங்கிய ஒரு பழந்தமிழ்ச்சொல் ஒரு காலகட்டத்திலே அவைதீக மதத்துறவிகளின் வெறுப்பு வாழ்க்கையை சமய அனுஸ்டானத்தயே அது பெரிதும் குறிக்க தலைப்பட்டதால், வைதிகர்கள் விரதம், தவம் என்னும் வட சொற்களை அப்பொருண்மையிற் கையாளத் தொடங்கினார்கள். காலகதியில் தமிழ் பேசுவோரில் அவைதிக சமயம் சார்ந்தோர் புறக்கணிக்கத்தக்க எண்ணிக்கையினரானார்கள். அந் நிலையில் நோன்பு என்ற அத்தூய தமிழ்ச் சொல்லை இஸ்லாமியர்கள் தமக்கே உரியதாக சுவீகரித்துக் கொண்டார்கள்.

ஏனைய வழிகளெல்லாம் இஸ்லாமியர்கள் தமது மதம்சம்பந்தமான கலைச் சொற்களாக அரபுச் சொற்களையே கையாளும் இயல்பினர் என்பதும் இங்கு மனங்கொள்ளத் தக்கதே. தமிழெழுத்து இஸ்லாமியர்கள் 'இஸ்லாம் எங்கள் வழி: இன்பத்தமிழ் எங்கள் மொழி' என்ற கோட்பாட்டினை வரித்துக் கொண்டவர்களாய் வாழ்ந்து பழகியவர்கள். நவீனயுகத்திலும் அவர்கள் அந்நிலையினின்றும் பெரிதும் நெகிழவில்லை எனலாம்.

தமிழிலக்கியத்தின் மையப்பொருளாக மதமே பெரிதும் தொழிற்பட்டுவந்த நிலமைமாறி, சமூக நோக்கிலான விடயங்கள் இலக்கியத்தின் மையப் பொருளாகத் தலைப்பட்ட காலத்தில் தமிழிலக்கியம் படைத்த இஸ்லாமியரின் ஆக்கங்கள் எத்தகையனவாய் அமைந்தன என்று நோக்கும் போது அவ்வுண்மையை உணரக் கூடியவர்களாவோம்.

இளங்கீரன் முதலான பெரும் எழுத்தாளர்கள் பலரும் இலக்கிய உலகுக்கான தமது புனைப்பெயரைத் தமிழ்மயப்பட்டதாக வைத்துக் கொண்டது முதல் தங்களின் முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற பாத்திரங்களாக தமிழிலக்கியம் ஏற்ற சூழலாகத் தமிழ்ச் சூழலையும் பெரிதும் கையாண்டதுவரை அவ்வுண்மையைக் கண்டு கொள்ளலாம். தமிழர்களும் அத்தகு நடவடிக்கைகளைச் சமூகமாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கதே. இலங்கையில் இன்று நிலவும் அரசியல் சூழ்நிலைகளால் இப்பண்புகள் ஆட்டங்கானத் தொடங்கியுள்ளன. வெளிப்படையாக மிக முரண்பட்டு நின்ற கிறிஸ்தவர்களும் சைவர்களும் ஒன்றுபட்டு நிற்க எக்கருத்தும் இலக்கியவழியால் முரண்பட்டிராத இஸ்லாமியர்களும் தமிழர்களும் பிளவுற்று நிற்கிறார்கள். ஆயினும், தமிழகத்துச் சூழ்நிலையில் இம்முரண்பாடுகள் காணப்பெறாமை மனதிற்கு ஆறுதல் தருவதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனங்களுக்காய்
படைக்கப்பட்ட
கருவறைகள்..
இன்றோ!
மரணங்களுக்கான
கல்லறையாய்
புதிய பரிமாணம்...

உயிரணுக்களின்
உயிர்கள்
அணுவணுவாய்
கொல்லப்படுகிறது
மருத்துவச் சித்ரவதைகளுடன்...

தொப்புள்கொடிகளே
தூக்குக் கயிறுகளாகின்றன
இந்தக்கருக்கலைப்பில்...

"பூக்களை தீயிட்டு
எரிப்பதைப்போல"
என்பதை தவிர
வேறெந்த உவமைகளும்
பொருந்தப்போவதில்லை
இந்த அகால மரணங்களுக்கு...

மனிதாபிமானம்
செத்துப்போய்விட்டதை
பகிரங்கமாய் பறைசாற்றுவதற்கா
சிசுக்கொலைகள்...?

உண்டான பிறகு
சிதைப்பதை விட்டுவிட்டு
உண்டாகும் முன்
சிந்தியுங்கள்...

நீங்கள்
சிதைப்பது உயிர்களை அல்ல
இவ்வுலகின்
நாளைய விடிவை !



# கருக்கலைப்பு

நிந்தவூர் ஷிப்லி



# சமாதான இயக்கங்கள்
## Peace Movements

A. சர்ஜுன், B.A (Hons), M.A (Political Science),
அரசறிவியல் துறை உதவி விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்-

சமாதான இயக்கம் என்பது அடிப்படையில் ஒரு சமூக இயக்கமாகும். யுத்தங்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலும் மனிதர்களுக்கிடையே ஏற்படும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலும் சர்வதேச சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் இவை அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. இதற்காக வன்முறையற்ற வழிமுறை, அமைதிவழி, இராஜதந்திரம், பணிப் புறக்கணிப்பு, எதிர்ப்பு ஊர்வலம் என்பவற்றை இவை உத்திகளாகக் கொண்டுள்ளன. அடிப்படையில் இவை யுத்தத்தை எதிர்க்கும் இயக்கங்களாக தோற்றம் பெற்ற போதிலும் இன்று இவை இனவாதம் மற்றும் சமூக அநீதி என்பவற்றை எதிர்க்கும் இயக்கங்களாகவும் மானிடப் பாதுகாப்பு, மனித உரிமைகள், சமூக நீதி, ஆயுதப் பரிகரணம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் பால்நிலை சமத்துவம் என்பவற்றுக்காக குரல் கொடுக்கும் இயக்கங்களாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன.

வரலாற்றில் எங்கெல்லாம் யுத்தங்கள் அல்லது யுத்த சூழ்நிலைகள் இருந்ததோ அங்கெல்லாம் சமாதானத்துக்கான, சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான முயற்சிகளும் இருந்திருக்கின்றன. இருந்தபோதிலும் அந்த முயற்சிகளெல்லாம் போதுமானளவு வெற்றியைப் பொற்றுத்தந்தனவாக இருக்கவில்லை. ஆனாலும் யுத்தங்கள் தீவிரத்தன்மையை அடைந்த போது; அது மானிட இருப்புக்கும் உயிரினச் சூழலுக்கும் பெரும் சவாலாக உருவெடுத்த போது சமாதானத்தை உருவாக்கிக் கொள்பவர்களின் குரல்கள் பெரியளவில் ஒலித்திருக்கின்றன. அவற்றில் சமாதான இயக்கங்களும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. எவ்வாறிருப்பினும் இந்த சமாதான இயக்கங்களால் எத்தனை யுத்தங்கள் அல்லது எவ்வளவு யுத்தகால பேரழிவுகள் தடுக்கப்பட்டிருக்கின்றன என அளவீடு செய்வது என்பது ஒன்றும் அவ்வளவு இலகுவான காரியமல்ல.

வரலாற்றை நோக்குவோமாயின் அதிகமான மக்கள் சமாதானத்தை விரும்புபவர்களாக இருந்தபோதும் இன்னும் ஒரு பகுதியினர் யுத்தத்தில் தீவிர ஆர்வம் உடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இன்று கூட அதிகமான மக்கள் சமாதானத்தை சலிப்பூட்டும் ஒன்றாகவும் யுத்தத்தை உணர்ச்சியூட்டும் ஒன்றாகவும் காண்கின்றார்கள். இன்று சமாதானம் சம்பந்தமான இலக்கியங்களை விட யுத்தம் சம்மந்தமான இலக்கியங்கள் (நாவல்கள், திரைப்படங்கள், பாடல்கள், சித்திரங்கள்) மக்களை விரைவாக ஊடறுக்கின்றன. எவ்வாறிருப்பினும் யுத்தத்திற்கு எதிரானது என்ற வகையில் தனித்துவமான சமாதானக் கலாசாரம் பல வடிவங்களில் இருந்தே வந்திருக்கின்றன. அவற்றுள் சமாதான இயக்கங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அந்தவகையில் அதிகமான சமாதான இயக்கங்கள் அடிப்படையில் யுத்தத்திற்கு எதிரான இயக்கங்களாகவே இருந்திருக்கின்றன. உண்மையில் 'சமாதானம்' என்பது யுத்தம் இல்லாத ஒரு நிலையை விட மேலானது. ஆனாலும் சமாதான இயக்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை வரையறை செய்யும் போது அவை யுத்தத்திற்கு எதிரான போக்கினையே காட்டி நிற்கின்றன. இன்று சூழல் சமநிலையைப் பேணல், பொருளாதார நேர்மையைப் பேணல், மனித உரிமைகளைப் பேணல் என்பன சமாதானம் மற்றும் முரண்பாட்டு ஆய்வுகளில் அடிப்படை நோக்காக அமைகின்றன. ஆனால் இவைகள் நாம் பெருமளவுக்கு அடையாளம் காண்கின்ற சமாதான இயக்கங்களில் அண்மைக்காலமாகவே ஒன்றிணைக்கப்பட ஆரம்பித்திருக்கின்றன.

இன்றைய மானிட அபிவிருத்தி நிலையில் பலர் இன்று யுத்தம் என்பது ஆபத்தானது; சிறந்தது அல்ல என ஏற்றுக் கொள்கிறார்கள். யுத்தங்கள் முன்பு இருந்ததை விடவும் ஒருபோதும் இல்லாதளவு குறைந்தளவு விருப்பத்துக்குரிய ஒன்றாகவும் குறைந்தளவு பயனுடையதாகவும் மாறிக்கொண்டிருக்கின்றன. இதனால் அரச மட்டத்தில் யுத்தத்தை ஆரம்பிப்பது மீதிருந்த ஆர்வம் 1945 களை அடுத்து மிகவும் அரிதாகிக் கொண்டு வருகின்றது. இதனால் இன்று எவ்வித யுத்த இயக்கங்களையும் (war movements) நாம் காண முடியாது. மாறாக சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான பல்வேறு ஒழுங்கைமைப்புக்களும் வழிமுறைகளும் உள்ளன. இவற்றில் சமாதான இயக்கங்கள் பிரபல்யம் பெற்றவைகள்.

### *சமாதான இயக்கங்களின் வரலாற்றுப் பின்னணி*

இன்று நாம் பிரபல்யமாகப் பேசுகின்ற மக்கள் மயப்படுத்தப்பட்ட சமாதான இயக்கங்கள் என்பன அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்றவைகளே. விசேடமாக அவை 19 ஆம் நூற்றாண்டிலிருந்து தோற்றம் பெற்றவைகளே. ஆனாலும் புகழ்பெறாத வகையில் சமாதானத்தை விரும்பிய பல இயக்கங்களும் செயற்பாடுகளும் கிரேக்க காலத்திலிருந்தே செயற்பட்டு வந்திருக்கின்றன. அந்த வகையில் சமாதானத்தை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணித்துச் செயற்பட்ட முதலாவது ஒழுங்கமைப்பாக Amphictyonic League என்ற அமைப்பு காணப்படுகின்றது. இது கிரேக்கத்திலிருந்த பல நகர அரசுகளால் நிறுவப்பட்டிருந்தது. இதன் அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதில்லை அவ்வாறே ஒருவருக்கான நீர் விநியோகத்தை மற்றவர் தடைசெய்வதில்லை என உடன்பட்டிருந்தனர்.

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் (Olympic Games) கூட புராதன கிரேக்கத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகவே அமைந்திருந்தன. ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு முறை 30 நாட்கள் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகளின் போது கிரேக்கர்கள் ஆயுதங்களைச் சுமப்பது அவ்வாறே யுத்தத்தை ஏற்படுத்துவது என்பன தடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறே பல்வேறு மதம்சார் சமாதான இயக்கங்களும் வரலாற்றில் தோன்றியிருந்தன. அந்தவகையில் ஆரம்ப கிறிஸ்தவ தேவாலயம் பெருமளவில் சமாதானப் பிரியமுள்ளதாகவிருந்தது. ஏசு நாதரின் போதனைகளும் அதனையே வலியுறுத்தி நின்றன. ஆனாலும் பின்னர் கிறிஸ்தவத்திலும் யுத்தம் சமாதான சிந்தனைகள் எழுச்சி பெறலாயின. சில சிந்தனையாளர்கள் யுத்தத்தை நியாயப்படுத்தவும் வந்தனர். பிரபல கிறிஸ்தவ சிந்தனையாளரும் மதப் போதகருமான அகஸ்டின் (Augustine) என்பவர் நீதி யுத்தக் கோட்பாட்டை (Just War Theory) உருவாக்கியிருந்தமை நோக்கத்தக்கது.

இதற்கு மாறாக பல மதச்சார்பற்ற சமாதான இயக்கங்களும் தோன்றியிருக்கின்றன. ஆனாலும் அவை இரு நூற்றாண்டுகால வரலாற்றையே கொண்டிருக்கின்றன. அந்தவகையில் 1815 இல் தாபிக்கப்பட்ட நியுயோர்க் மற்றும் மஸாசுசெட்ஸ் சமாதான சங்கங்கள் (The New York and Massachusetts Peace Societies) மிக முக்கியமானவை. இதை அடுத்த ஆண்டு நண்பர்கள் குழு ஒன்றினால் நிலையான மற்றும் பிரபஞ்ச சமாதானத்தை முன்னேற்றுவதற்கான சங்கம் (The Society for The Promotion of a Permanent and Universal Peace) என்ற ஒரு சமாதான இயக்கம் தாபிக்கப்பட்டதும் நோக்கத்தக்கது. இவற்றை அடுத்த ஆண்டுகளில் அத்திலாந்திக்கின் இரு பகுதிகளிலும் பல சமாதான இயக்கங்கள் தாபிக்கப்பட்டன. இவற்றில் 1866 இல் தாபிக்கப்பட்ட அமெரிக்கா சமாதான சங்கம் (The American Peace Society) மற்றும் Universal Peace Union என்பன முக்கியமானவைகள். அவ்வாறே 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு சமாதான மாநாடுகளும் கூட்டப்பட்டன. அவற்றுள் London (1843), Brussels (1848), Paris (1849), மற்றும் Frankfurt (1850) மாநாடுகள் முக்கியமானவைகள்.

இருந்த போதிலும் இந்த நிகழ்வுகள் எல்லாம் அரசாங்கங்களின் சிறிதளவு கவனத்தையே பெற்றிருந்தன. அதாவது அரசியல் ரீதியாக பெருமளவு ஓரங்கட்டப்பட்ட நிகழ்வுகளாகவே அவை அமைந்திருந்தன. சமாதான எண்ணக் கருவை சட்டபூர்வமாக்குவது மற்றும் பங்கு பற்றுபவர்களிடையே நம்பிக்கையை பரப்புவது என்பவற்றை விட இந்த நிகழ்வுகளில் பலமான அரசியல் ரீதியான வெற்றிகள் கிடைக்கவில்லை என்றே கூறலாம். ஆனாலும் பின்னர் 1890 களிலிருந்து 1909 வரை நடந்த ஹேக் சமாதான மாநாடுகள் (Hague Peace Conferences) அரசாங்கத் தலைவர்களிடையே பெருமளவு தாக்கத்தை செலுத்தியதுடன் குடிமக்களிடையே சமாதானத்துக்கான பெருமளவு ஆர்வத்தையும் ஏற்படுத்தின. 1892 இல் தாபிக்கப்பட்ட சர்வதேச சமாதான பணியகமானது (The International Peace Bureau) மிகவும் செயற்திறன் மிக்க ஒரு சமாதான இயக்கமாக இருந்ததுடன் அப்பணியகம் 1910 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றதுடன் 10 இற்கும் மேற்பட்ட அதன் அங்கத்தவர்களும் அப்பரிசை வென்றுள்ளனர்.

மிகப்பிரசித்தி பெற்ற பெண்கள் சமாதான இயக்கமான 'சமாதானத்துக்கும் சுதந்திரத்துக்குமான பெண்கள் சர்வதேச கழகம்' (The Women International League for Peace and Freedom- WILFP) 1915 ஹேக் காங்கிரஸில் தாபிக்கப்பட்டதுடன் சுமார் 1000 இற்கும் மேற்பட்ட அதன் அங்கத்தவர்கள் ஒன்று கூடி முதலாம் உலக மகா யுத்தத்தை எதிர்க்கும் நோக்கிலும் அதனை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது இச்சங்கம் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை பல நாடுகளில் கொண்டுள்ளதோடு அதன் அங்கத்தவர்களின் பலர் சமாதானத்துக்கான நோபல் பரிசை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் உலக சமாதான மாநாடுகளின் வெற்றி குறித்த விமர்சனங்கள் இருந்த போதிலும் சர்வதேச சமாதான இயக்கங்களின் முயற்சிகள் முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்பு League of Nations மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு ஐக்கிய நாடுகள் தாபனம் என்பன உருவாக்கப்படுவதற்கு பெருமளவு துணை செய்திருக்கின்றன. தவிர இந்த இயக்கங்கள் யுத்தத்தை பிரபல்யமில்லாத ஒன்றாக ஆக்குவதற்கும் சிவிலியன்மயப்படாத ஒன்றாக ஆக்குவதற்கும் பெருமளவு குரல் கொடுத்து நின்றன.

அந்தவகையில் உலகப் பிரபல்யம் பெற்ற யுத்தத்திற்கு எதிரான (சமாதான) இயக்கம் என்பது முதலாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் உச்சத்திலிருந்தது எனலாம். இந்த யுத்தமானது இரு பெரும் அதிகார சக்திகளிடையே ஏற்பட்ட பரஸ்பர அவநம்பிக்கை, வெறுப்பு என்பவற்றின் முடிவால் ஏற்பட்டது. பரந்தளவில் 'யாருமே வேண்டாத யுத்தம்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(The war nobody wanted) என முத்திரை குத்தப்பட்ட இந்த யுத்தம் இரு தரப்பிலுமிருந்த நிருவாகத் திறமையற்றவர்களின் மடத்தனமான தவறின் விளைவு எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. இதனைத் தொடர்ந்து எற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்தம் உலகில் பாரிய மானிட, சமூக, பொருளாதார அழிவுகளை ஏற்படுத்தியதுடன் மானிட மற்றும் உயிரினச் சூழலின் இருப்புக்கும் பெரும் சவாலை ஏற்படுத்தியது. இதனால் சமாதான இயக்கங்களின் மீள எழுச்சி 1950, 1960 களில் உலகம் பூராகவும் இடம் பெற்றுவந்தது. இது அணுவாயுதங்கள் குறித்த பொதுமக்களின் கவலையின் வளர்ச்சி மற்றும் குறிப்பட்ட சில யுத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் (Eg. கொரியா, வியட்னாம் யுத்தங்கள்) என்பவற்றின் ஊடாகவே வளர்ச்சி பெற்றது எனலாம்.

தவிர இக்காலப்பகுதியில் மூன்றாம் உலக நாடுகளிலும் சமாதான இயக்கங்கள் பிரபல்யம் பெற வந்தன. விசேடமாக மகாத்மா காந்தியின் வன்முறையற்ற இயக்கங்களின் (Non-Violence Movements) ஊடாகவும் அவ்வாறே ஜப்பானில் ஹிரோசீமா (Hiroshima), நாகசாக்கி (Nagasaki) அணுகுண்டு வீச்சின் பின்பும் உயிர் வாழ்ந்தவர்கள் அமைப்பான பிபாகுசா (Bibakusha) வினால் முன்னெடுக்கப்பட்ட அணு ஆயுதங்களுக்கு எதிரான விழிப்புணர்வு என்பவற்றினாலும் சமாதான இயக்கங்கள் பிரபல்யம் பெற வந்தன.

சமாதான இயக்கங்கள் பல்வேறு நோக்கங்களின் நிமித்தம் ஒன்று சேர்கின்றன. அந்த வகையில் குறிப்பிட்ட ஒரு யுத்தத்தை எதிர்ப்பதற்கு, அவ்வாறே குறிப்பிட்ட ஓர் ஆயுதத்தை அல்லது ஆயுத முறையை எதிர்ப்பதற்கு அல்லது நடைமுறையில் இருக்கும் சமூக பொருளாதார முறைகளையும் யுத்த முறைகளையும் எதிர்ப்பதற்கு என அவை ஒன்று சேர்கின்றன. இதன் படி சமாதான இயக்கங்களை பின்வரும் மூன்று வகைக்குள் பாகுபடுத்தலாம்.

1. *பொதுவில் யுத்தம் ஒழிக்கப்படகுரல் கொடுக்கும் இயக்கங்கள்*
2. *யுத்தத்தின் குறிப்பிட்ட சில விடயங்களை நிறுத்தக் கோரும் இயக்கங்கள்*
3. *குறிப்பிட்ட யுத்தங்களை நிறுத்த முற்படும் இயக்கங்கள் என்பவைகளே அவையாகும்.*

அத்தோடு சமாதான இயக்கங்களை மதம் சார்ந்தவைகள், கருத்தியல் சார்ந்தவைகள் என்றுமாகவும் பாகுபடுத்த முடியும்.

தற்கால சமாதான இயக்கங்கள் பண்மைத் தன்மை வாய்ந்த செயற்படுகளைச் முன்னெடுக் கின்றன. சில சமாதான இயக்கங்களின் செயற்பாடுகள் பெண்ணியல் வாதிகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன (Eg. Greenham Commons Women's Camps - Britain). இன்னும் சில சூழல் வாதிகளுடன் இணைந்து செயற்படுகின்றன (Eg. Green Peace, Friends of Earth).

**சுதந்திரத்தின் பின்னரான மிகப்பிரபல்யம் பெற்ற சமாதான இயக்கமாக சர்வோதய இயக்கத்தை சுட்டிக்காட்ட முடியும்.**

இன்னும் சில தனியார் உரிமைக் காகவும் மேலும் சில அணு ஆயுதங்களை எதிர்ப்பவர்களுடன் இணைந்தும் செயற்படுகின்றன. எனவே இன்று சமாதான இயக்கங்கள் அதன் உருவாக்க நோக்கமான யுத்தத்தை எதிர்த்தல் என்பதுடன் மட்டும் சுருக்கிச் செயற்படாது யுத்தத்தின் விளைவுகள், யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி, மனித உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு என பல்வேறு துறை சார்ந்து குரல் கொடுக்கின்றன செயற்படுகின்றன எனலாம்.



### *அமெரிக்காவில் சமாதான இயக்கங்கள்*

19 ஆம் நூற்றாண்டிலிருந்தே அமெரிக்காவில் பல்வேறு சமாதான இயக்கங்கள் தோற்றம் பெற்று செயற்பட்டு வந்துள்ளன. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு பின்பு வசேடமாக 1960 களிலிருந்து அமெரிக்காவில் பல்வேறு நோக்கிலான சமாதான இயக்கங்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும் தற்கால அமெரிக்க சமாதான இயக்கங்களை எடுத்து நோக்கின் அவை அளவுக்கு அதிகமாக மத்தியதர வெள்ளையினத்தவர்களின் இயக்கம் என குற்றம் சுமத்தப்பவதுமுண்டு.
அணுவாயுத எதிர்ப்பு, முறையற்ற அணுப்பரிசோதனை, அவ்வாறே வியட்னாம், கொரியா யுத்தம், எல்சல்வடோர், ஈராக் போன்ற நாடுகள் மீதான ஆக்கிரமிப்பு என்பவற்றுக்கு எதிராகவும் அமெரிக்காவில் பல சமாதான இயக்கங்கள் குரல் கொடுத்துள்ளன. அவ்வாறே சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் தொடர்புபட்டும் பல சமாதான இயக்கங்கள் தீவிரமாக குரல் கொடுத்து வருகின்றன. அண்மைக் காலமாக உலகமயமாக்கம் மற்றும் பாரிய பொருளாதார கூட்டு நாடுகளின் மாநாடுகளின் போதும் அமெரிக்காவில் பல சமாதான இயக்கங்கள் தீவிரமாக தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றமை நோக்கத்தக்கது.

அமெரிக்க சமாதான இயக்கங்களின் செயற்பாடுகள் ஒவ்வொரு காலத்திலும் குறிப்பிட்ட ஒரு விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி நின்றிருக்கின்றமையை அவதானிக்கலாம். அந்தவகையில் 1960 களின் ஆரம்பத்தில் வான் பரப்பில் இராணுவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு எதிராகவும் ஆயுதக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவாகவும் அவை குரல் கொடுத்து நின்றன. 1960 களின் மத்தியில் சிவில் உரிமை இயக்கங்களாக அவை செயற்பட்டன. 1960 களின் பிற்பகுதியில் வியட்னாம் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் அவை கூடுதல் ஆர்வம் காட்டின. 1970 களின் ஆரம்பத்தில் அவை சூழல் பாதுகாப்புக்காக அதிகம் குரல் கொடுத்தன. 1970 களின் பிற்பகுதியில் பெண்கள் உரிமை மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தன. 1980 களின் மத்தியில் அணு ஆயுத ஒழிப்பு மற்றும் அணு யுத்த ஒழிப்பு என்பவற்றுக்காக குரல் கொடுத்தன. 1980 களின் பிற்பகுதியிலும் 1990 களின் ஆரம்பத்திலும் தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராகவும் மத்திய அமெரிக்காவில் அமெரிக்கர்களின் ஆக்கிரமிப்புக்கும் எதிராகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டன. 1990 களின் பிற்பகுதியிலும் 2000 களின் ஆரம்பப் பகுதியிலும் மனிதாபிமான தலையீடுகளுக்கும் பொருளாதார சீர்படுத்தலுக்கும் வன்முறையற்ற வழிமுறைக்கும் ஆதரவு தெரிவித்ததோடு சூழல் பாதிப்புகளுக்கு காரணமான உலகமயமாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் அவற்றின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தற்போது இவ்வியக்கங்கள் ஈராக்கில் இடம் பெறும் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றிலும் அவ்வாறே உலகமயமாக்கத்தினால் ஏற்படும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான தாக்கங்கள் என்பவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்தி செயற்படுகின்றன.

உலக அளவில் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்ற உள்நாட்டு முரண்பாடுகள், உள்ளூர் யுத்தங்கள், ஆயுதப் பாவனைகள் அவ்வாறே அணுவாயுத பாவனை என்பவற்றை எதிர்க்கும் நோக்கிலும் சர்வதேச சமாதானத்தை ஏற்படுத்தும் அல்லது பலப்படுத்தும் நோக்கிலும் பல்வேறு சமாதான இயக்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வியக்கங்களில் சமாதானப் பிரியர்களான பல தனிநபர்களும் செல்வாக்குச் செலுத்தும் வகையில் பங்களிப்புச் செய்து வந்துள்ளார்கள் - வருகிறார்கள் என்பது நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில் சமாதான இயக்கங்கள்

இலங்கையில் சமாதான இயக்கங்கள், அவற்றின் செயற்பாடுகள் என்பவற்றை நோக்கும் போது அவை இன முரண்பாட்டின் தீவிரத் தன்மையின் பின்பே பிரபல்யமாகியிருப்பதை அவதானிக்கலாம். இருப்பினும் இலங்கையிலும் சமாதானத்தை விரும்பும் அல்லது ஆதரிக்கும் சில இயக்கங்களும் அமைப்புக்களும் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இயங்கி வந்துள்ளதை அவதானிக்கலாம். முக்கியமாக தேச விடுதலைக்காக செயற்பட்ட சூரியமல் இயக்கம் சமாதானப் பிரியமுள்ள இயக்கமாகவும் செயற்பட்டுள்ளது. ஆனாலும் சுதந்திரத்திற்குக்கு பின்பு இவ்வியக்கங்கள் பெரியளவில் பொது மக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை எனலாம்.

### சர்வோதய இயக்கம்

சுதந்திரத்தின் பின்னரான மிகப்பிரபல்யம் பெற்ற சமாதான இயக்கமாக சர்வோதய இயக்கத்தை சுட்டிக்காட்ட முடியும். இந்தியாவில் மகாத்மா காந்தியினால் தோற்றுவிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வியக்கம் இலங்கையில் ஆரியரத்னாவின் தலைமையில் வளர்க்கப்பட்டதோடு சிவில் சமூக மட்டத்தில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்பும் நோக்கில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளது. இன்றும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. வருடாந்தம் இவ்வியக்கம் நடாத்தும் சர்வ மத சமாதான மாநாடும் பிரார்த்தனையும் பிரபல்யம் பெற்றவைகள். பிரபல்ய புனிதப் பிரதேசங்களில் அனைத்து இனத்தவர்களையும் சேர்ந்த சமாதான பிரியமுள்ளவர்களை ஒன்று திரட்டி இந்த சமாதான மாநாடும் சர்வ மத பிரார்த்தனைகளும் இடம் பெறுகிறன. தவிர இவ்வியக்கம் சமாதான நோக்கில் சிவில் சமூக மட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கின்றது. சிரமதானப் பணிகள், பொதுப் பணிகள், சமாதான ஊர்வலங்கள், போட்டி நிகழ்ச்சிகள், யுத்தத்திற்கு எதிரான பிரச்சாரங்கள், வெளியீடுகள் என்பவற்றின் ஊடாக சமாதானத்தின் மீதான தனது அர்ப்பணிப்பை இவ்வியக்கம் வெளிப்படுத்தி வருகின்றது. கடந்த காலங்களில் இவ்வியக்கத்தின் செயற்பாடுகள் சர்வதேச அளவில் மெச்சிப் பேசப்பட்டுள்ளதோடு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டும் உள்ளது. இவ்வியக்கத்தின் தலைவர் கலாநிதி ஆரியரத்ன சமாதானத்துக்கான சர்வதேச விருதுகள் பலதை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2004 சுனாமிப் பேரழிவுக்குப் பின்னர் இவ்வியக்கம் தனது செயற்பாட்டை பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தி நோக்கிலும் விஸ்தரித்துள்ளதோடு நாடு தழுவிய ரீதியில் அச்செயற்பாடுகள் நடந்தேறுவதும் நோக்கத்தக்கது.

### வெண்தாமரை இயக்கம்

1994 இல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ள அரசியல் ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது போலவே சிவில் சமூக மட்டத்தில் சமாதானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் அதற்கான ஆதரவையும் ஒன்றுதிரட்டும் நோக்கிலும் உருவாக்கிய இயக்கமே வெண்தாமரை இயக்கமாகும். ஓர் அரசியல் கட்சி சார்பு சமாதான இயக்கமாக இது உருவெடுத்த போதும் அக்கட்சியின் சமாதான வழிமுறைகளையும் நடவடிக்கைகளையும் சிவில் சமூகமயப்படுத்துவதிலும் பிரபல்யப்படுத்துவதிலும் இவ்வியக்கம் அர்ப்பணிப்போடு செயற்பட்டது. சமாதான வீதியோர நாடகங்கள், சமாதான கலாசார நிகழ்வுகள், சமாதான சஞ்சிகை வெளியீடு, பிரார்த்தனைகள் என்பவற்றினூடாக யுத்தத்தை எதிர்த்து யுத்தத்தின் கோர விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க இவ்வியக்கம் முயன்றது. அரசியல் மட்டத்திலும் தேசிய அளவிலும் நன்கு பிரபல்யம் பெற்றிருந்த இவ்வியக்கம் 1990 களின் இறுதிப் பகுதிகளில் பிரபல்யம் குறையத் தொடங்கி இன்று அதன் பெயரையோ அல்லது செயற்பாடுகளையோ காணமுடியாதளவு அது செயலிழந்துள்ளது. எவ்வாறிருப்பினும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்தில் சுமார் 4 - 5 ஆண்டுகள் இச் சமாதான இயக்கம் இலங்கையில் பிரபல்யம் பெற்றிருந்தது என்பது நோக்கத்தக்கது.

1990 களின் பின்பு இலங்கையில் உள்ளூர் மோதலும் யுத்தமும் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து யுத்தத்தின் தாக்கம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியதோடு மானிட, சுற்றுச் சூழல் உயிரின இருப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக வந்தபோது சமாதான இயக்கங்களின் செற்பாடுகளும் அதிகளவில் இருந்ததை அவதானிக்கலாம். யுத்தத்தின் போதும் யுத்தத்தில் சிக்கியும் சிவிலியன்களும் இராணுவத்தினரும் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தோரும் ஆயிரக் கணக்கில் உயிரிழந்ததோடு யுத்தம் பல்லாயிரக் கணக்கான சிவிலியன்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயரச் செய்துள்ளது. தவிர யுத்தத்தால் அங்கவீனர்களானோர், அநாதைகளானோர் மற்றும் விதவைகளானோர் என பல்வேறுபட்ட தரப்பினர் யுத்தத்தின் கோர விளைவுகளை சந்தித்துள்ளனர். இதனால் இவர்கள் குழுக்களாகச் சேர்ந்து யுத்தத்தை எதிர்ப்பதிலும் அதனை முடிவுக்கு கொண்டுவருவதிலும் அவ்வாறே நாட்டில் சமாதானத்தை உருவாக்கிக் கொள்வதிலும் தீவிர கவனம் செலுத்த வந்தனர். அப்போது அவர்கள் தம்மை சமாதானக் குழுக்களாக அல்லது இயக்கங்களாகவே காட்டிக் கொண்டனர். யுத்தத்தில் பிள்ளைகளை இழந்தோர் அமைப்பு, பெற்றோரை இழந்தோர் சங்கம், அநாதைகள் சங்கம் என்பன அவற்றில் சில. அன்மைக்காலமாக யுத்தத்தை எதிர்க்கும் அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து போருக்கு எதிரான முன்னணி என்ற ஓர் இயக்கத்தை தொடக்கி செயற்படுகின்றமையும் நோக்கத்தக்கது.

இவ்வியக்கங்கள் எல்லாம் யுத்தத்தை எதிர்த்தும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும் ஆட்சியாளர்களை வற்புறுத்தி பல்வேறு எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்தி தீவிரமாக செயற்பட்டு வருவதனைக் காணலாம். அவ்வாறே இலங்கையில் பல்வேறு பெண்கள் இயக்கங்களும் அண்மைக்காலமாக யுத்தத்தில் பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்படுவதை கண்டித்தும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளையும் நலன்களையும் நிலைநாட்டக் கோரியும் தீவிரமாக செயற்பட்டு வருவதும் நோக்கத்தக்கது.

எவ்வாறிருப்பினும் இச்சமாதான இயக்கங்களால் இலங்கையின் இன முரண்பாட்டை அல்லது அண்மைக்காலமாக அதிகரித்துவரும் பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளையும் ஆயுதக் கலாச்சாரத்தையும் இல்லாதொழிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு எவ்வளவு தூரம் முடிந்துள்ளது என்பது கேள்விக்குரிய ஒரு விடயமே. உண்மையில் இலங்கையில் இன்று முரண்பாட்டின் கோர விளைவு யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை வலுகுன்றச் செய்துள்ளதோடு இரு தரப்பு யுத்த முனைப்புக்களையும் தீவிரப்படுத்தியுள்ளது. இலங்கையில் சிவிலியன்கள் இடப்பெயர்வு மற்றும் சிறுபான்மையினர் உரிமை மீறல்கள் என்பன அதிகளவில் அதிகரித்துள்ளன. இவற்றிக்கு எதிராக சமாதான இயக்கங்கள் குரல் கொடுத்த போதிலும் அரசியல் அதிகாரத்தினதும் ஆயுதங்களதும் குரல்களே உயர்ந்து நின்கின்றன என்பது வெளிப்படை.

### முடிவுரை

சமாதான இயக்கங்கள் சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கிலும் பலப்படுத்தும் நோக்கிலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் இயக்கங்களாகும். கிரேக்க காலத்திலேயே இச்சமாதான இயக்கங்கள் தோற்றம் பெற்றிருக்கின்ற போதிலும் சர்வதேச





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் பிரபல்யம் பெற்ற சமாதான இயக்கங்களின் வரலாறு என்பது சுமார் இரண்டு நூற்றாண்டு பழமை வாய்ந்ததே. யுத்த சூழ்நிலைகள் தீவிரமடைந்த காலகட்டத்தில் சமாதான இயக்கங்களின் தோற்றமும் செயற்பாடும் அதிகளவில் இருந்திருக்கின்றன. அந்த வகையில் சமாதான இயக்கங்கள் அடிப்படையில் யுத்தத்தை எதிர்க்கும் இயக்கங்களாகவே உருவாகி செயற்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று சமாதான இயக்கங்கள் யுத்த எதிர்ப்பு, யுத்த நிறுத்தம், மனித உரிமை மீறல், மனித உரிமைப் பாதுகாப்பு, பெண்கள், சிறுவர்கள் நலன்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, அணுவாயுதப் பவனை எதிர்ப்பு என பல்வேறு விடயங்கள் குறித்தும் தமது கவனத்தைச் செலுத்துவதோடு அவற்றால் மானிட, உயிரினச் சூழல் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்தும் தமது கவனத்தை செலுத்துகின்றன. அத்தோடு உள்ளுர் மட்டத்தில் இனங்களுக்கிடையே ஐக்கியம், சமாதான சகவாழ்வு, சமூக இணக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. எவ்வாறிருந்த போதிலும் சமாதான இயக்கங்களின் செயற்பாடுகள் அதிகளவில் விமர்சிக்கப்படுவதுமுண்டு. உண்மையில் யுத்தத்தை எதிர்ப்பதில் செயற்படும் இவ்வியக்கங்களால் எத்தனை யுத்தங்களை நிறுத்த முடிந்துள்ளது அவ்வாறே எவ்வளவு யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட அழிவுகளைத் தடுக்க முடிந்துள்ளது என்பதெல்லாம் பெரும் கேள்விக்குறிகளாகவே உள்ளன. அத்துடன் இந்த சமாதான இயக்கங்கள் அரசாங்கங்களதும் அதிகார சக்திகளதும் சர்வதேச நிறுவனங்களதும் கைப்பொம்மைகளாகவே செயற்படுகின்றன என்ற விமர்சனங்களும் உள்ளன..

எது எவ்வாறிருப்பினும் உண்மையில் சமாதான கலாசாரத்தை வளர்ப்பதிலும் சமாதானத்தை கட்டி எழுப்புவதிலும் இச் சமாதான இயக்கங்களின் பங்களிப்புக்கள் அதிகளவில் இருந்திருக்கின்றன என்பது நோக்கத்தக்கது.

**Reference Books**


1. Barash D.P, Webel C.P (2002), ***Peace and Conflict Studies***, London: Sage Publications Ltd, pp.28-54.

2. Edmund Jan Ozmanczyk (2003), ***Encyclopedia of the United Nations and International Agreements***, Vol-3, New York: Routledge, pp.1781-1782.

3. Rober D., Benford Frank.O, Tylor IV, Peace Movements, in Kurtz L, (ed), (1999), ***Encyclopedia of Violence, Peace, and Conflict***, London: Academic Press, pp.771-786



சிங்கள மக்கள் செறிந்த வாழும் ஒரு பிரதேசத்திலிருந்து, குறைவான வசதிகளுடன் ஐந்தாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது, அநுராதபுரம் நட்சத்திர நற்பணி மன்றத்தின் வெளியீடான படிகள் இருமாத இலக்கிய இதழ். கடந்த ஐந்து ஆண்டுகளில் இவ்விதழின் வரவில் புதிய தலைமுறைப்படைப்பாளிகளின் முயற்சியும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

படிகள் ஐந்தாவது ஆண்டுச் சிறப்பிதழ் வெளிவந்துவிட்டது. தொடர்பு கொண்டு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்



முகவரி -
The Editor, Padihal, 78B, Jayanthi Mawatha,
Anuradhapura # 50000. Tel - 0713565219.




ஈழத்து கவிதைத்துறைக்கு புதிய பரிமாணத்தை புகுத்தியவர்களுள் கிழக்கிலங்கை கவிஞர்களுக்கும் பெரும் பங்குண்டு. கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு, நாகரீகம் என்பனவற்றில் இன்றைய கலாசார உடைவுகள் ஏற்படுத்தி வருகின்ற மாற்றங்கள் போனறவற்றின் வெளிப்பாட்டியலை, ஈழத்து கவிதை இப்பிரதேச இலக்கியச் செல்நெறியிலிருந்தே புணர்ந்துகொண்டது. இன்று முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் இலக்கியத்துறை ஈடுபாடு, முஸ்லிம் சமூகத்தின் அறிவியல் வளர்ச்சியின் முக்கிய அடையாளமாக அமைந்துள்ளது. இவ்வடையாளம் என்பது ஒரு சாதாரண மட்டத்தின் இருப்பாக அன்றி முழு முஸ்லிம்களின் கலாசார அடையாளமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கருத்தியல் தன்மைகளுக்கு தனது படைப்பின் வீச்சுடன் பயணம் எடுக்க விளைகிறார், கவிதாயினி நுஹா. நுஹாவின் முதலாவது கவிதைப்பிரதியாக அமைந்துள்ள புள்ளியைத்தேடும் புள்ளி மான் என்ற பிரதி, அவரது வாழ்வனுபவங்களின் முழு வெளிப்பாடாக அமைந்துள்ளது.

சம்மாந்துறை தேசிய கலை இலக்கிய தேனக வெளியீடாக வெளிவந்துள்ள நுஹாவின் கவிதைப் பிரதியில் கலைவேள் மாறன் யு. செயின், மன்சூர் ஏ. காதிர், கலாநிதி சே. யோகராசா, றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர்களின் உரைகள் பதிவாகியுள்ளன.

நுஹாவின் கவிதைகள் ஒரு புதிய படைப்பாளியின் படைப்புத் தளத்தையே அவாவி நிற்பதாகப் படுகிறது. கவிதைகளில் விரவியுள்ள மொழி வீச்சான படைப்புகளுக்கான தடயங்களாக தெரிகின்றதாயினினும், ஏலவே கவிதைப் பகைப்புலத்தில் சாதாரண படைப்பாளிகளால் உரையாடப் பட்டவிடயங்களே மீள உரையாடப்படுகின்றன.

# எஸ். நுஹாவின்
## *புள்ளியைத் தேடும் புள்ளிமான்*
**கவிதைகள்**



*அநு. இப்னு ஆயிஷா*

பெண்ணியல் வாதக் கருத்தியல் முக்கியமான விவாதமாக மாறிவிட்ட இக்கால கட்டத்தில், நுஹா ஆரம்ப கட்டங்களை பேச முனைவது பற்றி யோகராசா, மன்சூர் ஏ. காதிர் ஆகியோரின் உரைகள் குறிப்பிடுகின்றன. எனினும் பெண்ணாய்ப்பாரும் கவிதை இப்பிரதியாளரின் படைப்பின் வீச்சை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

*பெண்மை விழித்து*
*வெகு நாட்களாச்சு*

என்று பெண்மையை உறுதிபடக் கூறும் நுஹாவின் நம்பிக்கை மனங்கொள்ளத்தக்கன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேய்களும் பிசாசுகளும் கூட
இந்த இரவுகளில் வெளிவருவதில்லை
மந்திர வாதிகளுக்கும் வேலையில்லை
அத்தனை பயம்
ஆறுமணியுடன்
ஊரே அடங்கிவிடுகிறது.

நாய்களோ..
வழமைக்கு மாறாய் எந்த நேரமும்
குரைத்துக் கொண்டிருக்கின்றன
அதனால் தூக்கமும்
கலைந்து கொண்டேயிருக்கிறது.

அங்குமிங்கும் அலைந்து திரியும்
வாகனங்களிலிருந்து வரும்
ஒலிகளுக்கோ குறைவில்லை

“டுமீல்! டுமீல்”
வெடிகளும் கேட்கின்றன
எங்கள் வீடுகள் வெளியே
வீதிகளில் எந்த நேரமும்
நடமாடிக் கொண்டேயுள்ளார்கள்
அவர்கள்.
அதிரடிப் படையினராய் அல்லது
இராணுவத்தைச் சேர்ந்தவர்களாய்
அல்லது புலிகளாயும் இருக்கலாம்
ஊர்காவல் படையினரின்
உலாவாகவும் இருக்கலாம்!

எட்டிப்பார்க்கலாம்தான் எனினும் வெடி
பட்டால் என்ன செய்வது? நினைத்தாலும்
இரத்தம் உறையப் பார்க்கிறதே !

எங்கள் வளவுகளுக்குள்ளும்
ஆட்களின் நடமாட்டம் கேட்கிறது..



கிணற்றடியில் “துலா”வை
யாரோ இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்..

அடுத்த அறையில்
பெண்கள் துயிலுமிடத்தில் அவர்களுக்கருகே
இன்னொருத்தன் வந்தொழிந்தாலும்
தெரியாத காரிருள்

எப்போது விடியப் போகிறது
இவ்வறையைவிட்டும்
வெளிவருவதும் எப்படியோ?
“ஹய்ய அலஸ் ஸலாத்”
“ஹய்ய அலல் பலாஹ்”
“அஸ்ஸலாது கைருன் மினன்னவ்ம்”
சுபஹிற்கு பாங்கு கேட்கிறது
யாரை நம்பி வெளியே வருவது
காலை விடியட்டும் எல்லாவற்றையும்
கவனிப்போம்.

1984

கவிஞர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ம் நூற்றாண்டின் பின் அரைக்கூறுகளில் தோற்றம் பெற்ற கருத்தாக்கமே பின் நவீனத்துவம். ஆரம்பத்தில் ஒரு சிறுவட்ட ஐரோப்பிய விமர்சனங்களின் கலை இலக்கிய மனோபாவமாக விளங்கிய இக்கருத்தாக்கம் இன்று மெய்யியலாளர், சமூகவியலாளர், அறிவியலாளர், அழகியலாளர், வரலாற்றியலாளர், இயற்கைவாதி என பல்துறைசார் புலமையாளர்களிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்திட்ட தத்துவமாக ஆகியிருக்கிறது. பூக்கோ, லக்கான், டெறிடா, லியோத்தார்ட், பௌதலியாக்ட், டெலூஸ் ஆகியோர் இச்சிந்தனை மரபின் முக்கிய பிரதிநிதிகளாவர்.

இரண்டாவது உலக யுத்தம் பெருவாரியான மக்கள் தொகையை இங்குமங்குமாகப் புலம்பெயரச் செய்திருந்தது. இந்தப்புலப்பெயர்வு தமது அடையாளத்திற்கான தேவையையும் தமது பாரம்பரிய கண்டுபிடிப்பின் தேவையையும் அவர்கள் முன் வேண்டி நின்றன. இந்த வேண்டுதல் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கட்டடக்கலையில் வெளிப்படத் தொடங்கியது. இந்த வெளிப்பாடு 50களில் ஏற்பட்ட சௌகரிய வசதிபடைத்த தன்மை காரணமாக ஐரோப்பிய அமெரிக்கர்களின் வாழ்வில் போரில் ஏற்பட்ட மாற்றமும், அதனால் பாரம்பரிய அதிகார அமைப்புக்களில் ஏற்பட்ட உடைவு, பாரம்பரிய கொண்டாட்டங்களில் ஏற்பட்ட சலிப்பு, நம்பிக்கை அற்ற தன்மை போன்றனவும் அப்போதைய கவனத்தைப் பெற்ற கருத்தாக்கமாக இருந்ததன் விளைவே பின் நவீனத்துவமாகும்.

1950க்கு முன்னரே அதாவது 30களில் இருந்து பின் நவீனத்துவம் என்ற பதப்பிரயோகம் அவ்வப்போது பாவிக்கப்பட்டு வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. Charles Olson என்பவர் பின் நவீனத்துவம் என்ற பதத்தை தனது கடிதங்களிலும், எழுத்துக்களிலும் பாவித்தார் இருந்தபோதிலும் பின் நவீனத்துவத்தை வியாக்கியானப்படுத்தவோ, விளக்கி வைக்கவோ ஒல்சன் முயற்சி செய்ததாக தெரியவில்லை. Olsonஐ அடுத்து Irving howe, harry Levin போன்றோரும் பின் நவீனத்துவம் பற்றி நிறைய பேசியிருந்தனர். பல கருத்துக்களையும் முன்வைத்தனர். ஆனால் 50களுக்கு பிற்பாடு பின் நவீனத்துவம் சமூக அக்கறை பெற்ற ஒரு கருத்தாக்கமாக ஆகியது. இருந்த போதிலும் அந்த அக்கறையின் அளவுக்கேனும் மொழிவயப்பட்ட, தத்துவவழிப்பட்ட, எழிமையானதொரு புரிந்து கொள்ளலை அது தனக்கென எவரிடமிருந்தும் பெற்றுக் கெண்டதாக தெரியவில்லை. புத்திஜீவிகள், பெண்ணியலாளர்கள், சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள்,




எம்.என்.எம். சசீர்
உதவி விரிவுரையாளர்

மாணவர்கள், ஓரினப்புணர்ச்சியாளர்கள் என ஒவ்வொருவரும் பின் நவீனத்தை வெவ்வேறு அர்த்தங்களில் விளக்கினார்கள் 'Dictionary of Acquired Meaning' இப்படிக்கூறுகின்றது.

**பின் நவீனம் கருத்தியல் ரீதியில் சமூகத்தை அர்த்தமற்றதாக்கிறது. சமூக சாரத்தை மறுக்கிறது. சமூக உறவுகளை வலுவற்றவையாக, வரையறுக்கப்பட முடியதவையாக, அறியப்பட முடியதவையாக ஆக்குகிறது.**



“இன்றைய பேச்சு வழக்கில் அதிகமாக பயன்படுத்தப்படும் கருத்து இது. இதற்கு ஒருஅர்த்தமும் கிடையாது. எத்தனை முறை வேண்டுமானாலும் பயன்படுத்தக்கூடியது”. உலகைப் புரிந்து கொள்வது சாத்தியமில்லை அவ்வாறு புரிந்து கொள்ள மனிதன் முற்படும் போது அதுபற்றி ஊகங்களை மட்டுமே எடுத்துரைப்புக்கள் வெளியிட முடியும். இவ்வூகங்கள் அவனது சொந்த எடுத்துரைப்புக்கள் மாத்திரமே எனக்கூறும் பின் நவீனத்துவ வாதிகள் பகுத்தறிவு, மனிதஉரிமை, ஜனநாயகம், சோசலிசம், மனித நேயம், விடுதலை, நீதி, ஒழுக்கம், உண்மைகள் போன்ற நவீனகால சிந்தனைகள் அனைத்தும் வெறும் எடுத்துரைப்புக்களே - கற்பனைகளே என்கின்றனர். இதுபற்றி Lyotard குறிப்பிடும் போது 19ம் நூற்றாண்டின் அனைத்துத் தத்துவவாதிகளும் சில எடுத்துரைப்புக்களை அல்லது கற்பனைகளையே தரமுயற்சித்தனர். ஆனால் “அவை அனைத்தும் இன்று காலாவதியாகிவிட்டன” என்றார். பின் நவீனத்துவ சமூகத்தில் இத்தகைய அரசியல் அறிவுக்கும் கொள்கை ரீதியான அறிவுக்கும் அதிர்வினை காட்டக்கூடிய மனிதநிலைக்கும் இடமிருக்காது என்றார் அவர்.

ஆனால் இவ் எடுத்துரைப்புக்கள் வெறும் கற்பனைதான் என்பதை பின் நவீனத்துவ மனிதன் அறிந்து கொண்டதும் அவற்றின் மீது நம்பிக்கை இழக்கின்றான், அவற்றை வெறுக்கிறான், மனச் சோர்வடைகிறான், மிதந்து திரியும் பிரக்ஞையுடையவனாய் அங்குமிங்கும் அலைகிறான். இது பற்றி பின் நவீனத்துவ வாதிகள் 'கையறு நிலையில் பின் நவீனத்து மனிதன் வாழ்கின்றான்: எல்லா மக்களுக்கும் எல்லாக்காலங்களுக்கும் பொருந்தக்கூடிய நீதி, உண்மை, பகுத்தறிவு என்கின்ற அடித்தளங்கள் எல்லாம் தகர்ந்து போய் இன்றைய மனிதன் தனது பிரக்ஞையைக் கட்டிப் போடுவதற்கு நம்பிக்கைகள், அடித்தளங்கள் ஏதுமின்றி மிதந்து திரியும் பிரக்ஞை உடயவனாய் நிற்கிறான். அவன் பின்பற்றிய தத்துவங்கள் எல்லாமே அவனைக் காலை வாரிவிட்ட நிலையில் அவனது நம்பிக்கைகள் பொய்த்துப்போன சூழலில் அவன் எதிர்கொள்ளும் சகல வன்முறைகளையும் நியாயப்படுத்தவே இன்றைய தாக்கங்கள் எல்லாம் பயன்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் வேறென்ன செய்வான்? என்கின்றனர்.

அவ்வாறாயின் இத்தகைய அவலநிலையைக் கடந்த பின்நவீனம் கூறும் வழிதான் என்ன? வழி எதுவும் இல்லை என்பதுதான் அதன் வழி. வழிகூறுவதற்கு பின் நவீனத்துவம் ஒரு எடுத்துரைப்பு அல்ல. எனவே அது வழி கூறாது. ஏற்கனவே உள்ள எடுத்துரைப்புக்களின் வெறுமையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டுவதோடு பணி முடிகின்றது. பின் நவீனத்துவம் தனக்குள்ள பொறுப்பை தட்டிக்கழிக்கும் ஒரு செயல் இது என விமர்சிக்கப்படுகின்றது.

பின் நவீனத்துவத்தின் மேற்கூறிய நிலைப்பாடு காரணமாக ஜனநாயகம், உரிமை, நீதி, ஒழுக்கம், மனிதநேயம், விடுதலை போன்ற நவீன மதிப்பீடுகள் எல்லாம் கேள்விக்குட்பட்டிருக்கின்றன. அவை தடுக்கப்படுகின்றன. இன்று நாம் செய்ய வேண்டியது இதுதான். இம் மதிப்பீடுகளின் பலன்கள், சிறப்புக்கள், இலாபங்கள், முன்னேற்றங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் படி செய்ய வேண்டும். எனவே தான் ஹெபர் மாஸ் கூறுவது போல "இன்றைய சமூகத்தின் முன்னுள்ள முதல் வேலை நவீனத்துவத்தின் செயற்பாட்டை தீவிரமாக மேற் கொண்டு தொடரவேண்டுமே ஒழிய அதைவிட்டு நவீனத்துவத்தை மறுப்பதென்பது குளியல் தொட்டித் தண்ணீருடன் குழந்தையையும் சேர்த்தே கொட்டிவிடுவது போன்ற செயலாகும்" நவீனத்தை தொடர்வதே இன்றைய தேவை ஒழிய குறைகளுக்காக முற்றிலும் நவீனத்துவத்தை நிராகரிப்பது தவறு எனப்படுகிறது.

நவீன கால மதிப்பீடுகளை வெறும் கற்பனைகளாக பிரகடனம் செய்த பின்நவீனத்துவ வாதிகள் வேறுசில அடிப்படைக் கருது கோள்களையும் முதன்மைப்படுத்துகிறார்கள். அதில் ஒன்றுதான் பொதுக்கருத்தென ஒன்றிருக்க முடியாது இருப்பதெல்லாம் தனித்தனிக்கூறுகள்.
தனித்தனி நிகழ்வுகள் தனித்தனி அம்சங்கள் என்பதால் தனிக்கருத்தே பொருளுடையது வலியுறுத்தப்பட வேண்டியது என்கிறார்கள். பொதுமை வேறுபாடுகளை, விலகல்களை ஒதுக்கிறது இல்லாமல் செய்துவிடுகிறது என்பது இவர்கள் கருத்து உதாரணமாக இன்று வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் இரு சமூகங்களையும் 'தமிழ் தேசியம்' என்கின்ற ஒரு பொதுமையின் கீழ் வைத்து நோக்க முற்படுகிறார்கள். ஆனால் இவ்விரு சமூகங்களுயும் தமக்கென்றே தனித்துவமான வேறுபாடுகளை, அடையாளங்களை, கலாசாரங்களை, நடத்தைகளை, உறவுமுறைகளை தனித்தனியாகக் கொண்டிருக்கின்றன. 'தமிழ் தேசியம்' என்ற ஒரு பொதுமையாக்கத்தினுள் இவ்விரு சமூகங்களும் இணைக்கப்படும் போது அவற்றின் அடையாளங்களை, தனித்துவங்களை இப் பொதுமையாக்கம் இல்லாமல் செய்து விடுகிறது.

எனவேதான் சமூகத்தில் நிலவும் பன்மைக் கூறுகளை மறுதலிக்கும் போக்கு பொதுமைக் கொள்கைக்கு இருக்கிறது என்றார, லியோதார்த். பெதுமைப்படுத்தலின் போது ஓர் ஒற்றை மையம் உருவாகிறது அந்த ஒற்றை மையத்தினுள் சமூகக்குழுக்களின் அடையாளங்கள் அனைத்தும் கரைக்கப்பட்டு விடுகின்றன உயர்தரம் கொண்டதாக ஆக்கப்பட்டு சகல சமூகக் குழுக்களுக்கும் அடையாளங்களை அந்த ஒற்றை மையத்தை நோக்கி தள்மமைத்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அந்த ஒற்றை மையம் சகலரையும் பிரதித்துவப் படுத்துவதாக ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. ஒரு பொது விதிக்குள் அனைத்தும் கொண்டு வரப்படுகின்றன. இது அதிகாரத்தின் ஒரு வடிவம் என்கிறார், லியோதார்த். இது ஒரு விதமான காலனி ஆதிக்கம், என்பது அவரது கருத்து.

எனவே பொதுமைக்குப் பதிலாக தனிக்கூறுகள், தனிநிகழ்வுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதும் வலியுறுத்தப்பட வேண்டியதுமாகும் என்கிறது பின் நவீனத்துவம். பின் நவீனம் வலியுறுத்தும் கருத்துக்களில் இது முற்போக்கானது என்பது சில விமர்சகர்களின் அபிப்பிராயமாகும். இச்சிந்தனை மரபின் அடுத்த அம்சம் கருத்தொற்றுமை என்ற பெயரால் கருத்துச்சுதந்திரம் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பேசுவது, அதாவது வரலாறு புறக்கணித்த வரலாற்றில் மறுக்கப்பட்டவர்களைப்பற்றி பேசுகிறது. இவர்களை விளிம்பு நிலை மக்கள் என நவீனம் அழைக்கிறது. இக்கருத்தை முதன்முதலில் முன்மொழிந்தார் டோஸ்டோவ்ஸ்கி என்ற ரஸ்ய எழுத்தாளர்தான் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பைத்தியக்காரர்கள், கைதிகள் போன்றோரை விளிம்பு நிலை மனிதர்கள் என அவர் அழைத்தார். அம்மக்களின் வீர விடுதலைக்காகவும் அவர் குரல் கொடுத்தார் அதனை அடுத்து பிராங்பேர்ட் (Frankfurt) சிந்தனா கூடத்தை சேர்ந்த Herbrt Marcuse என்பார் 'ஒற்றைப் பரிமாண மனிதன்' என்ற நூலில் இது பற்றிக் கூறினார். சமூகத்தின் அதிகார மையத்திலுள்ள முதலாளியும், தொழிலாளியும் அதிகாரத்திற்காகப் போராடுகின்றனர்.

ஆனால் அவர்கள் சமூகத்தின் புறக்கணிக்கப்பட்டு விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட மக்கள் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை, என Marcuse தனது நூலில் கூறினார் மாணவர், பெண்கள், வேலையில்லாத மக்கள் ஆகியோருடன் ஓரினச்சேர்க்கையாளர்கள், கறுப்பர் ஆகியோரையும் சேர்த்து பின் நவீனத்துவவாதிகள் தமதுசிந்தனையை வளர்த்தனர். இந்தியாவில் தலித்துகள் இவர்களது பட்டியலில் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிரார்கள் உண்மையில் பித்து நிலைக்கிறார்கள், கைதிகள், மாணவர்கள், பெண்கள், வேலையில்லாதோர், ஓரினச்சேர்க்கையாளர்கள், கறுப்பர்கள் தலித்துகள் என வரலாறு மறுக்கப்பட்ட மனிதர்களை விளிம்பு நிலைச்சிந்தனை மூலம் வரலாற்றின் கதாநாயகர்களாக்கிறது, பின் நவீனத்துவம்.
இறுதியாக பின் நவீனத்துவத்தின் மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தையும் விமர்சன ரீதியில் சுருங்க நோக்கின், பின் நவீனம் கருத்தியல் ரீதியில் சமூகத்தை அர்த்தமற்றதாக்குகிறது. சமூக சாரத்தை மறுக்கிறது. சமூக உறவுகளை வலுவற்றவையாக வரையறுக்கப்பட முடியாதவையாக, அறியப்பட முடியாதவையாக ஆக்குகிறது.

புறவுலகின் அர்த்தமின்மையையும், அந்நியத்தன்மையையும் அது வெளிப்படுத்துகிறது Gerald Graff கூறுவது போல பின் நவீனம் ஒருவகையான சடங்குத்தன்மையைக் கொண்டுள்ளது. அது ஒரு புதிய ஐதீகத்தை முன்வைக்கிறது.

**"பொதுமைக்குப் பதிலாக தனிக்கூறுகள், தனிநிகழ்வுகளை கருத்திற் கொள்ளப்பட வேண்டியதும் வலியுறுத்தப்பட வேண்டியதுமாகும் என்கிறது பின் நவீனத்துவம்"**

உலகைப்பற்றியும் மனிதனைப் பற்றியும் தெளிவான கருத்தாக்கம் எதனையும் அது முன்வைக்கவில்லை. எல்லா பண்பாட்டு வேர்களையும், சமூகப் பொறுப்புணர்வுகளையும் இழந்துவிட்ட நவீன நகர்ப்புற வர்க்கத்தின் சிந்தனை என இது அழைக்கிறது. எனவேதான் பின் நவீனத்துவமானது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட, ஒருமைப்பட்ட, ஒரு முழுமையான, பூரணமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்நெறியல்ல ஆகவேதான் Ihab Hassan கூறுவது போல பின் நவீனத்துவம் இன்னமும் விவாதத்துக்குரிய பொருளாகவே இருந்துவருகிறது எனக் கூறினார். இது ஒரு நல்ல முடிவாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

பின் நவீனத்துவ வாதிகள் கூட தாம் பேசுகின்ற போதும், எழுதுகின்ற போதும் குழப்பமான அர்த்தங்களையே பிரயோகிக்கின்றார்கள் என்கிற விமர்சனமும் உண்டு. அலன் கொரல் என்ற சிந்தனையாளர். வார்த்தைகளை தன் இஷ்டப்படி பயன்படுத்துவது, பயன்படுத்தும் சொற்களுக்குத்தான் நினைத்ததுதான் அர்த்தம் என்று வாதிடுவது மொழிக்கு எதிரானதாய் அவமதிக்கின்ற, அதன் இருப்பை இல்லாமல் செய்கின்ற செயல் இது. இதைத்தான் பின் நவீனத்துவவாதிகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்கிறார் அவர். ஆக பின் நவீனத்துவவாதிகள் வழிவழியாக பல்லாண்டுகால நாகரீகத்தின் பயனாக வார்தைகள் அன்று பெற்றுள்ள அர்த்தங்களைக்கூட அவற்றுக்கு வழங்க மறுக்கிறார்கள். மக்களை குழப்பவேண்டும் என்றே திட்டமிட்டு வார்தைகளை பயன்படுத்துகின்றார்கள் என்பதுதான் அலன் கோரலின் அபிப்பிராயம்.

எனவே பின் நவீனத்துவம் என்பது நூற்றுக்கணக்கான அர்த்தங்களை கொண்ட அர்த்தமற்ற தத்துவம் என்றதொரு விமர்சனத்தை இச்சிந்தனை மரபு கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் சமூக கலாசார வாழ்வில் வழக்கில் இருக்கும் அடக்கு முறையின் நுட்பமான வடிவங்களை அடையாளப் படுத்தவும் விமர்சிக்கவும் இட்டுச்செல்லும் சிந்தனை பின் நவீனத்துவம் என்ற சமூகவியல் விளக்கத்தினையும் இது பெற்றிருக்கிறது.

பின் நவீனத்துவம் மரபு ரீதியான பழைய சமூகங்கள் கொண்டிருந்த கருத்து நிலைகளையும் நவீன முதலாளித்துவ சமூகம் அறிவித்திருந்த பல்வேறு சமூக இலக்குகளையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறது. இறைவன், சமூகம், தனிமனிதன், பிரக்ஞை, அறிவு, மானிட விடுதலை போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் எந்தவொரு உலக நோக்கையும் அது ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இருப்பதெல்லாம் கூறு கூறானவை, பன்மைத் தன்மையானவை, தொடர்பற்றவை, தனித்தனியானவை, தற்காலிகமானவை என்பதுதான் இதன் வாதம் ஆக பின் நவீனததுவம்.

*01.* வரையறுக்கப்பட்ட நிலையை மறுத்து ஒருமைக்குப் பதிலாக பன்மையையும், வேறுபாடுகளையும் வலியுறுத்துகிறது.
*02.* எல்லாக்காலத்துக்குமான பொதுவான உண்மைகளை உலகு கடந்த கருத்துக்களை சந்தேகிக்கிறது. மறுக்கிறது.
*03.* வரலாற்றில் அதுகாலவரை ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த மக்களின் தன்னிலையை ஒப்புக்கொண்டு ஐரோப்பிய மைய வாதத்தை அது கட்டுடைக்கிறது.

மேற்கூறிய பிரகடனங்களின் அடிப்படையாகக் கொண்டே அது, உலக சமூகம், மனித வரலாறு பற்றி தனது கருத்துக்களை முன்மொழிகிறது.

**2006/2007 ஆண்டுக்கான தேசிய சாஹித்திய விழாவில் பதக்கடச்சாக்கு கவிதை நூலுக்காக விருது பெற்ற துறையூரான் அஸாருதீன் அவர்களை, பல்கலைக்கழக சமூகம் சார்பாக நிஷ்டை வாழ்த்துகிறது.**





# செடி நாத்தம்

வெள்ளை எருமை
வெயிலில் குளிக்கிறது..
எருமையான
கறுத்தப் பசுக்கள்
மழையில் காய்கிறது..
புல் தின்ன அடம்பிடிக்கும்
புலிகள் மாமிசமென்றால்
இரத்த வாந்தி எடுக்கிறது..

செடிநாத்தம்..

மனித இறைச்சி தின்றால்
எப்படி இருக்குமோ
அப்படியே...

செடிநாத்த வாந்திக்குள்
மூளைகளும்
ஈரல்களும்தான்
பெரிய துண்டும்
சிறிய துண்டுமாய்
சிதறிக் கிடக்கிறது
கிட்ட நெருங்க முடியாது
கட்டுப்பாட்டு எல்லை போலும்
உயர் பாதுகாப்பு வலயம் போலும்
சாக்கடைத்தனமான வெகர்...

மூக்கைப் பொத்தியவாறே சிலர்
பனியில் பழுத்த பழங்கள் போலும்
பாதி வேக்காட்டில் இறக்கிய
பணியாரம் போலும்
மடமடக்கக் கொடி பறக்கும்
லோவறில் வருவர்
விண்ணைப் போலவே
மண்ணில் ஏவப்பட்ட
ராடர்களே இவர்கள்
ஆனாலொரு கொடுமை
பசுவை எருமை என்றும்
எருமையைப் பசுவென்றும் உளறிப்
பத்திரிக்கை மாநாடு நடாத்துவர்
பித்தம் வெடித்த இறைச்சியை
வைத்துக் கொண்டு
புச்சன் முழிப்பதைப் போல...
இவர்கள் அவர்களின்
ஒவ்வொரு வார்த்தைகளுக்கும்
பசுத் தோல் போத்தி விடுவார்கள்
பனி மொழி ஆங்கிலத்துக்கு
வட-கிழக்கிலும் கூதற் கொடுகிறதோ..
எங்களிடம் கேட்டிருந்தால்
அராபியத் தோசத்திலிருந்து
கம்பளிகளை இறக்குமதி
செய்திருப்போம்...

பூ னைகள் குரைக்கும் வரை
இவைகளும் நடக்கும்..

ஒட்டகங்கள் பாய்ந்து
குதித்தோடவும்
குதிரைகளுக்குக்
கொம்பு முளைக்கவும்
பிராத்திப்போம்...

*துறையூரான் அஸாருதீன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புப் போடி

## ஓர் மாக்சிய நோக்கு

T. சற்குணராசா ஐயா

சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை உடனடியாகவே ஒரு சிலர் விரும்புவதில்லை. காரணம் ஒரு பயம். இது பொருளாதார ரீதியாகவும் இருக்கலாம், இலக்கிய ரீதியாகவும் இருக்கலாம். இலக்கிய ரீதியாகப் பார்க்கும் போது மரபுக் கவிதையாளர் புதுக் கவிதையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எழுத்துச் சுதந்திரம் ஏற்படும் போது பழமைவாதிகள் எதிர்த்தனர். பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது உழவு இயந்திரம் வந்தவுடன் மாடுகட்டி உழுவோர் தமது தொழிலுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தனர்.

இவ்வாறு பற்பல உதாரணங்களைக் கூறமுடியும். அது போலவே வேளாண்மை வெட்டும் இயந்திரம் வந்த போது ஏற்பட்ட பீதிநிலமையினை உருக்கமாக பின்வருமாறு கவிஞர் அஸாருதீன் காட்டுகிறார். இது ஒரு மாக்சிய சிந்தனையும் கூட.

“பொடவ கசங்குற
பொலப்பு தேவல்லண்டு
காலக் கைய உசுப்பி
கதிரடிச்சிக் காலங்கடத்துற
கஸ்ஸா லாத்தா அன்னா
கதிகலங்கி நிக்கா சாச்சா
கண்ணத் திண்ட – அந்த
இரும்புப் போடியால ....”

மேற்சொன்ன இரும்புப்போடியார் என்ற கவிதையில் வெள்ளாமை வெட்டும் பொருட்டு இயந்திரம் வந்ததையிட்டு வெள்ளாமை வெட்டும் தொழிலாளர்கள் பயந்தனர், நடுங்கினர் ஆனால் பூனையை நாய் விட்டு குலைத்துக் கொண்டு போகும் போது இனி தன்னால் தப்பிக்க முடியாது என்று எண்ணியவுடன் நின்று திரும்பி நாயைப் பார்த்து சீறும். நாய் வெருண்டு விடும் பூனை பக்கத்திலுள்ள மரத்தில் ஏறிவிடும். இதுபோலதான் வயலுக்குள் இயந்திரம் வந்தால் அதற்கு முன்னால் விழுந்து இறந்து விடுவோம் என்ற கூலித் தொழிலாளர்களின் அங்கலாய்ப்பு அங்கே கவிதையில் வெட்ட வெளிச்சமாக உணர்வு பூர்வமாகத் தெரிகிறது. இதிலோரு விசேடம் என்னவென்றால் இக்கவிதை யாத்தவர் நிச்சயமாக கூலித்தொழிலாளர்களின் நேரடி தொடர்பாடல்களை நன்கு அவதானித்துள்ளார், என்பதும் இங்கு கூறமுடியும். அனுபவம்தான் கவிதையில் வரும்.

ஆசிரியரின் இன்னொரு விடயம் பணம் படைத்தோர் இயந்திரத்தை கொண்டுவருவதற்கு ஒரு முக்கிய காரணத்தையும் கூறலாம். தவித்த முயல்..... என்று ஒரு பழமொழியுண்டு.

வேளாண்மை செய்பவர்கள் போடிமார் என்று அழைத்தாலும், எல்லோரும் உண்மையில் போடிமார் அல்ல. வேளாண்மை செய்வதற்கு வட்டி கொடுத்து கடன் வாங்கி வங்கியில் லோன் பெற்று வேளாண்மை செய்திருப்பார்கள் மழை வந்துவிடுமோ என்ற பயம் ஏக்கம் வேளாண்மை வெட்டுவோர் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மனித மனம் வெறுக்கும் அளவுக்கு கூலி கேட்பார்கள். நியாயமான கூலி கேட்டால் இயந்திரம் ஏன் வரப்போகிறது. .இயந்திரம் வாங்கும் பணத்திற்கு மேலும் கூடியவகையில் வேளாண்மை செய்யலாமே. இருந்தும் இயந்திர வருகையால் கூலியாட்களின் உழைப்பினை பணம் படைத்த சிறு கூட்டத்தினரான பண முதலைகளே சுரண்டுகின்றனர். இது உலக இயல்பு, வழமை. இதைத்தகர்ப்பதோ அல்லது கட்டுடைப்பு செய்தலோ மாக்சியப் போக்கும் - இக்கவிதையும்.



# இன்னொரு எழுச்சிக்காய்

இஸ்லாத்தின் விடியலில்
இதமாய் முகம் கழுவி
சன்மார்க்கத் துணியால்
மெதுவாய் முகம் துடைத்தோரே..
இன்னுமொரு எழுச்சி எமக்கிங்கு தேவை.

நாகரீகத்தின் பெயரால்
நரிகளாய் உலாவும் நயவஞ்சகர்களின்
அண்மையிலும் அண்டாமல்
ஷைத்தானியத்தை சிறையெடுக்க
இன்னுமொரு எழுச்சி எமக்கிங்கு தேவை.

அறியாமையில் மலர்ந்த
அய்யாமுல் ஜாஹிலிய்யா – இன்று
நாகரீகத்தின் பெயரால்
நளினமாய்த் தொடர்கிறது...

முஹுத்தசிலாக்கள் – இன்னும்
வாழ்வதால் இன்று
மண்ணறைக்குள் பலியான
பெண் சிசுக்கள் இன்று
கருவறைக்குள்ளேயே
கல்லறை காண்கின்றது...

மகளிரின் மகத்துவம் போற்றி
அறியாமைத் தலைகளை அகற்றி
கரும்மிருள் சூழ்ந்த மனங்களுக்கு
பெருவொளி பாய்ச்சிய
சாந்தி மார்க்கமே – இன்று
லேபல் முஸ்லிம்களாய்
எமையினங் காட்ட
ஊடகமானதுவோ...

இதயத்தில் இதனால்
இரத்தம் கசியுது..
இன்னுமொரு எழுச்சிக்காய்....



ஜீ.எம். றுஸ்டா ஷீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உயிர் பறித்து உண்ணல்

"அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்..."
எமதூர் பெரிய பள்ளிவாசலின் ம·.ரிப் தொழுகைக்கான
மிகத்தெளிவான அழைப்பு இது

பொழுது முகத்தில் இருள்வைக்க புறப்படத்தயாரக
"அல்லாஹ்வுடைய காவலாய் போய்வாருங்கள்" என
எமதூர் தாய்மாரின் குரல்கள்
மனசு முழுவதிலும் ஓங்கி ஒலிக்க
போய் திரும்புவது
இன்னமும் இன்னமும் சாத்தியமானது தானா?

ஆயிரம் முறைகளுக்கு மேலாகவும்
கேட்டுக் கொள்கிறேன்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தொழுகை வேளையிலும்
1990 இன் ம·.ரிபும்
2005 இன் ஸுபஹும்
என் நினைவில் வர

தோழுகையில் தொடங்கி
மாடு அறுக்கும் தள(ல)மாய்
மாறிப் போனது பள்ளி
உன் காலடி ஓசைகள்
எங்களை இல்லாது செய்வதற்காய்
ஒலித்ததை மறந்து
என்னோடு இணைந்து கொள்
என்னோடு இணைந்து கொள்
என எம்மவருடைய ஒவ்வொரு
தோள்களும் உனக்காக நீள

இருட்டில் என்னமோ
நடந்தேறியது

சுவர்களில் துளைகள் விழ
மரத் துண்களில்
சிராய்ப்புக்கள் வெடிப்புக்களோடு
இரண்டு முறையும்
தொழுகை முடிக்கப்படாமலே போயிற்று

உடல்கள் துடி துடிக்கவும்
உடல்களில் விழுந்த துளைகளுடாக
வடிகிறது பள்ளி
எழுந்து வீழ்கிறது உடல்கள்
இரத்தக் காடாய் பள்ளி


ருகூவிலும், சுஜூதிலும்
உன்னை விடவும்
அவர்களை (அவர்கள் செய்த அநியாயத்தை)
அதிகம் நினைத்துக் கொண்டோம்

"அஸ்ஸலாத்து ஹைரும் மினல் ஹூஸ்ன்"
தூக்கங்களை விடவும் தொழுகை
மிக மிக மேலானது என பிலால்
மீண்டும் மீண்டும் சொல்வது போல இருக்கிறது

ஆதீக் ஹஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அப்துல் ரகுமான்: தமிழில் உலகறிந்த கவிஞர் வைரமுத்து, மேத்தா, வாலி வரிசையில் அப்துல் ரகுமானும் மிகவும் பேசு பொருளான ஓர் பெறுமானக் கவிஞர். பத்து விரல் கட்குள்ளும் எண்ணி அடக்க முடியாத நூல்களை, விசேடத்துவமாக கவிதை நூல்களை இலக்கிய உலகிற்குத் தந்த ஒரு நல்ல கவிஞர். பல்லாயிரக் கணக்கான விமர்சகர்களின் ஜாம்பவானும்கூட. பூப்படைந்த சப்தம், தொலைபேசிக் கண்ணீர், முட்டை வாசிகள், உறங்கும் அழகிகள், பசி எந்தச் சாதி என நீண்டு செல்லும் இவரது நூலுருப் பட்டியல் வாசகர்களின் இலக்கியப் பசிக்கு நல்ல இலக்கிய விருந்தாய் அமைந்ததும் அமைவதும் நல்ல கணிப்பு.

அத்துடன் மேற் குறித்தவாரான முத்தங்கள் ஓய்வதில்லை, நேயர் விருப்பம், காற்று என் மனைவி என்பனவும் கவிக்கோவுக்கே உரித்தான நல்ல இலக்கியங்கள். இருந்த பட்சத்திலும் கூட இம் மும் மூர்த்திகளும் சிறுக்க விமர்சிக்கப்படக் கூடிய ஒரு தன்மையினை எம்மால் உணரலாம்.

இன்று இலக்கிய வரட்சி நிலவும் காலத்திலே வாசிக வட்டம் குறுகாலடைந்து செல்வது நியாயமானதே. அதன் நிமிர்த்தம் பதிப்பு முயற்சிகள் கவற்சிகரமானதாக அமைதல் ஒரு தேவைதான். இருந்தும் மேலய கவிக்கோவின் மூன்று நூற்களும் பெண்கள் தொடர்பில் அல்லது பொண்ணுரிமை தொடர்பில் உதாசீனமானதாக இருப்பதனை விமர்சனம் கொள்ளலாம்.

அதே நேரம் இந்திய கவிதைத்துறையானது வியாபாரம் அல்லது சிறந்த வணிகம் என்று விமர்சிக்கப்படுகின்ற காலகட்டத்திலே பதிப்பகங்களும் அவ்வாறாக வாணிப நோக்கில் தொழிற்படுவதென்பது பெரிய விடயமல்ல. அதற்காக பல நுட்பங்களையும் கையாண்டு வருகின்றனர் இந்தவகையில் பதிப்பு முயற்சிகள் செழிப்பாக உள்ள நாடாக இந்தியாவின் தமிழகம் இருப்பது நோக்கத் தக்கதே. அதற்காக பெண்ணிய வாத்தினை சிதறடிக்கச் செய்கின்ற வெளியீட்டு முயற்சிகள் நிச்சயம் விமர்சிக்கத்தக்கதே. புறத்தே இன்னுமொரு துறை கவிதைத் துறையோடு சேர்த்து வளம்பெறுவதனை எம்மால் அவதானித்து உணர முடிகிறது. நவீன சித்திரங்கள் (Modern Art) என்பது இன்று மிகவும் நுட்பமாகக் கையாளப் படுவதும், சிந்திக்கப் படுவதும் நல்லதான ஓர் வகுநிலை இருப்பினும் தூரிகைகள் பெண்களின் சில பாகங்கள் வெளிப்படையாக அல்லது உணர்வூட்டும் வகையில் வரைவது மற்றுமொரு சீர்கேட்டின் வரித்த சிறப்பு என்பதனையும் ஏற்கவே வேண்டும்.

"காற்று என் மனைவி" எனும் நூலின் அட்டைப்படமானது நிர்வாணமான ஒரு பெண்ணின் மீது சிறு சீலைத்துண்டுகள் தவறுதலாக விழுந்தது போல ஒரு காட்சியைக் காணலாம். மறைபாகங்களை தெண்டித்து வெளிக்காட்ட முயன்றிருக்கும் இவ் ஓவியம் கவிக்கோவின் முன்னட்டையாகக் காணக் கிடப்பது சற்று விமர்சிக்கத் தோன்றுகிறது. எவ்வளவோ சீலைத்துண்டுகள் அப்பெண்ணிற்குப் புறத்தே அல்லாடிக் கொண்டிருக்கின்ற போதிலும் அவைகள் அப்பெண்ணின் உடல்களின் பாகங்கள் மீது தூரிகைப் படுத்தப் படாமை அல்லது வர்ணப்படுத்தப் படாமை கவலை.

**இந்திய கவிதைத்துறையானது வியாபாரம் அல்லது சிறந்த வணிகம் என்றளவுக்கு கவிதையிலும் வியாபாரம் ஊறியுள்ளது.**

"முத்தங்கள் ஓய்வதில்லை" நல்ல கவிதைகளை உள்வாங்கியுள்ளதனை எமது விமர்சனம் மறுக்காது. அதேநேரம் முகப்பட்டையின் ஓவியத் தந்திரமும் சிந்திக்கவே செய்கிறது. இருந்தும் அவ்வட்டைப்பட ஓவியங்கள் தமிழ் முத்தங்களுக்காக தயாரிக்கப் பட்டிருக்கலாமே? மாறாக ஆங்கில முத்தங்களுக்குத் தயாராக்கி இருக்கின்றமை, பெண்களின் முத்தமிடத் தவிக்கும் உதடுகளைச் சித்தரிப்பதுவாய் அமைகிறது. எமது தலைப்பிலிருந்து சற்று நழுவி முத்தங்கள் ஓய்வதில்லை எனும் கவிதை நூலுக்குள் ஆங்கிலத் திரைப்படம் பார்ப்பது போல் எமக்குள் ஓர் உணர்வு. காகித இலக்கம் 110, 128, 138, என்பன ஆபாசமாக இருப்பதனை உணர முடிகிறது.




"நேயர் விருப்பம்" இது மும் மூர்த்தியில் இறுதி மூர்த்தி. இதன் முகப்பட்டை மிகவும் நுனுக்கமான தூரிகையால் வர்ணிக்கப்பட்டதன் விளைவு உண்மையிலேயே நல்ல முயற்சிதான். இருந்தும் இந்த நவீன சித்திரம் கூட தவறி விழுந்திட்டதாய் எண்ணம் கொள்ளச் செய்கிறது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவரும் "வயது வந்தவர்களுக்கு மட்டும்" ஆங்கில திரைப்படத்தின் விளம்பரப் பலகைகளில் வரவேண்டியது. இம் முகப்பட்டையில் பார்வையைத் தெளிக்கும் போது சுவாரசியமான கதையைக் காணலாம்.

அழகிய இளங் குமரி சிதறிய கூந்தலோடு முழுக்க நிர்வாணமாய் தும்பிகளின் இறக்கைகளோடு பறந்து செல்கிறாள். நீல நிற வர்ணம் அவள் மேனியெல்லாம் பூசப்பட்டிருக்கின்றமை குறித்து நோக்கத்தக்கது. முற்றிலும் திறந்த அவள், உடற் பயிற்சியர்கள் போல் தெளிவாக ஓவியப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆதே நேரம் அப் பெண்ணாகிய தும்பியினை ஒரு தேனி தேன் குடிக்கும் பொருட்டு துரத்தி வருகிறது. அதற்குள் இச்சம்பவம் ஒரு பூந்தோட்டத்துள் நடைபெறுகிறது. பூக்களில் தேனருந்துதலை விட அப் பெண்ணில் தேனருந்தும் பெருட்டு தேனி சித்திரமாகி இருக்கிறது. குடும்பத்திற்கு மத்தியில் இந் நூலை வாரிகைகள் ஒழித்து, ஒலித்துப்படிக்கும் வாசகவட்டமே அதிகம். நேயர் விருப்பமும் இதுதானோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்



ஒரு
சமகாலத்து
சாதாரண பிரஜை.

இயற்கையையும்
இலக்கியத்தையும்
காதலிப்பவன்.

தனிமையையும் - அதன்
இனிமையையும்
விழைபவன்.
கவிஞன்.

பிரான்சிய பெருங்கவி
போத்லேயர்
குழந்தைச் சேக்ஸ்பியர்...
ரெம்போ
ஜேர்மனியக் கவி ரில்க்
எஸ்ரா லூமிஸ் பவண்ட்
இவர்களைப் போல
கந்தனையிலும்
காலி முகத்திடலிலும்
வேறு வீதிகளிலும்
வெளிகளிலும்
தனிமையில் அலைய
ஆசைப்படுபவன்.

ஆனால்
கனவுகள் சுமந்து
இன்பக் கற்பனையில் சிறகடிக்க
இன்றைய உலகம்
சாமான்யமானதல்ல
திறந்த வெளிச் சிறை..

கொலையும். கொலை வெறியும்
மிகைத்து..
மனிதம் மறைந்துவிட்ட - இத்
து(ர்)ப்பாக்கிய தேசத்தில்
கானகத்தில் சிறைப்பட்ட
பறவைகளாய்
சுதந்திர நாட்டின்
அடிமைகளாய்
நாம்.

எனது உணர்வுகளும்
மட்டுப்படுத்தப்பட்ட கவிதைகளாய்
இங்கு...

- நேஹா -



# அல்தமனம்



- அக்கரை அர்ஷா

இரவுப் பொழுதானது தூக்கத்தைக் கலைத்துக் கண்விழித்துக் கொள்கின்றது. வாழ்த்துக் கூறியவாறு காகங்களின் கரைச்சலும், சேவலின் கூவலும் அவற்றினை வரவேற்கின்றது.

முற்றத்தில் நின்ற நாவல் மரத்தில் உள்ள குயிலின் ஓசை இனிய கானமாகின்றது. விடிந்தும் விலகிடாத நிலவானது ஒற்றையாக ஆகாயத்தில் எட்டிப் பிடிக்கக் கூடிய உயரத்தில் நின்று பூமியைப் பார்த்து புன்சிரிப்பினை உதிர்க்கின்றது. பனியில் குளிக்கும் மலர்க் கூட்டங்கள் மணத்தினைப் பரப்பியவாறு, எனக்கு காலை வந்தனங்களைக் கூறுவதற்கு தலையை நிமிர்த்துகின்றன. விடிந்திருக்கும் அப்பொழுது என் வாழ்க்கையின் ஏதே ஒரு இலக்கினை நோக்கி நகரும் ஒரு படியாகவே அமைகின்றது. வழமை போல எனது காலைக் கடன்களை சிறு தேனியைப் போல மிகச் சுறுசுறுப்பாக முடித்துவிட்டு என் பயணத்தினை தொடர்வதற்கு இறகு விரிக்கின்றேன்.

பஸ் புறப்படத் தொடங்கிறது. வழியிலே எனைக் கண்ட மலைகளும், மரங்களும் மகிழ்ச்சியோடு வரவேற்க தயாராகி மெதுமெதுவாக தலை கூப்பி நகருகின்றன. யன்னல் வழியாக ஊடுருவி வரும் இளந்தென்றல் என்னை வருடியவாறு மேனியெங்கும் பட்டு சிலித்திட வைக்கின்றது ஒவ்வெரு செகன்களும் நிமிடங்களாகி நிமிடங்கள் மணித்தியாலமாகின்றது. அவ்வேளை பஸ்ஸானது அதிகம் உண்டு வயிறுபருத்து விம்புவது போல சனத்திரளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

மூச்சு விட முடியாத படி பஸ்ஸில் சனக்கூட்டம் அதிகரிக்க, ஒருவரை ஒருவர் உறாய்வதைப் பார்த்து என் மனமும் சலனப்பட்டது.
எனினும் என் நினைவுகள் லண்டன் செல்வதற்கு எனக்கு கிடைக்கும் வாய்ப்புக்காக நான் முகம் கொடுக்க இருக்கும் நேர்முகப்பரீட்சை பற்றி ஊசலாட்டம் வந்து வந்து கனவுகளில் அலைமோதி கலைகின்றது. சிறு வயது முதலே என்னைப்போல எனது பெற்றோருக்கும் நான் ஒரு வைத்தியனாக வேண்டும் என்ற கனவே இருந்தது. இருந்தும் எனக்கு பிரயோக விஞ்ஞான பீடமே கிட்டியது. பல்கலைக்கழக கல்வியோடு வேறும் சில கற்கை நெறிகளை பூர்த்தி செய்து எனது கல்விச் செல்நெறியில் புதிய அடைவுகளை கண்டேன்.
இவ்வாறு என்னைப்பற்றிய கனாக்களுக்குள் ஒரு தேவதை போன்ற அழகியை என் விழிகளுக்குள் சிறையிட்டது, அப்போது...

என் கண்களுக்கு காட்சி தந்த அந்தப் பெண்ணின் கையில் அமையப்பெற்ற நகப்பொட்டு வெள்ளை நிறத்தை விஞ்சிய நீளமான தோடு நகத்தினை அடுத்து அழகிய கரும் கோடுகள் பிறை போல சுற்றியிருப்பதும், பஸ்ஸின் வேகத்தினால் அவள் தனது பாதுகாப்புக் காரணமாக கம்பியை பற்றிக் கொள்ளும் போது அவளின் நகத்தின் நிறம் கூட மாறுவதாய் எனக்குப்பட்டது. உதட்டின் கீழ் அழகு சேர்க்கும் சிறிய மச்சமும், கன்னங்களில் விழும் ஒற்றைக் குழியும் அவளது நிறமும் அழகினை ஒருங்கித்தது. எளிமையான அளவான அழகு மிக்க இவள் கண்கள் எங்கோ ஒரு விதத்தில் அறியப் பெற்றிருப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குள் ஒரே குழப்பங்கள்....
இருவரும் ஒருவரை ஒருவர் முழித்து முழித்து பார்த்து விட்டோம். ஒரே ஒரு முறையான அவள் பார்வைக் கணைகள் அவள் பற்றிய என் சந்தேகங்களுக்கு விடை கொடுப்பதாக அவள் புன்னகைத்து விட்டு மௌனமாவதில் இருந்து என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆண்களோடு அதிகம் உரையாட விரும்பாத அவள் பாடசாலைக் காலத்தில் விவாதம் போட்டியில் பல தடவைகள் எனக்கு எதிர் அணியில் பங்கு பற்றிய வேங்கைப் புலி நிறோஸா என்பது தெரிந்து போயிற்று. அந்த நாட்களின் பின் அவள் பற்றிய நினைவுகள் என்னில் சிறைப்படும் அளவிற்கு நான் வித்தியாசமானவனாக இருந்தது அதிசயமே. பாடசாலைக் காலத்தில் பலரும் கூட காதல் - கீதல் என்று அலைந்து திரிவது எனக்கு ஒரே சலிப்புதான். சிறுவயது முதல் எந்தப் பெண்களோடு சகவாசம் கொள்வதை விரும்பாத உள்ளம் ஐந்து வருட இடை வெளிகளில் இத்தனை அழகுகளையும் ஒன்று சேர்த்து தன்னகத்தே கொண்டு அமைந்திருக்கும் அவள் என் ஆண்மையில் ஒரு மாற்றத்தை, ஏற்படுத்துவதாக உணரமுடிந்தது.

என் சகோதரிகளோடு தேவையை விடுத்து அதிக நேரம் பேசுவதை தவிர்த்துக் கொள்ளும் நான் பல்கலைக்கழகம் சென்றபோதும் பரீட்சை வேளையில் குறிப்புக்களை பெற்றுக் கொள்ள மட்டும் பெண்களோடு பேசுவதைத் தவிர இதில் மாற்றத்தை ஏற்படுத்தாத என் உள்ளம், ஒரேபார்வை பார்த்தவுடன் ஈர்ந்த அவளினை என் நினைவுகள் சுற்றி வளைந்து கொண்டது.

அவளது பயணம் முடியும் இடத்தில் பஸ்ஸை நிறுத்த என்னிடம் மணியை ஒலிக்கச் செய்ய அவள் வேண்டிக் கொண்டது எனக்குள் சலனித்தது. எதேச்சயாக அவளது பாதணி சரிந்ததன் காரணமாக ஏற்றாட்ட தடுமாற்றம் எனக்கு கவலையை ஏற்படுத்தியது. அவள் நாணத்தினால் தலை குனிந்தவளாகவே இறங்கிச் சென்றாள். எனது நேர்முகப் பரிட்சைத்தேர்வு அதில் எனக்கு கிடைத்த சாதகமான முடிவு அவளுடான சந்திப்புடன் கலந்து என்னை மகிழ்வில் ஆழ்த்தியது.

இதுவரை எப்பெண்ணிடமும் தொடர்பு வேண்டி நிற்காத நான் அவள் பற்றி தகவலுக்காக அவளின் நண்பியை நாடுகின்றேன் - என்வீட்டுக்கு முன்வீட்டில் வசிக்கும் அவள் நண்பியிடம் ஆரம்பகாலத்திலிருந்து ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வதால் எனக்கு அவள் ஒரு ஓடத் துடுப்பினைப் போல உதவலானாள் அவள் மூலமாக என் காதல் உணர்வுகள் உயிர்பித்துக் கொண்டது. நிறோசாவின் தூர நோக்கு, இலக்கும், கற்றலைக் காதல் செய்யும் அவள் பாங்கும் எல்லோராலும் விரும்பப் படும் அவள் துணிவான பணியும் எனக்கு மேலும் அவளின் மூலம் ஈர்ப்பினை ஏற்படுத்தியது. ஒரே ஊரிலே இருவரும் வாழ்ந்து வந்தாலும் கூட ஒருவரை ஒருவர் காணக் கிடைக்காமை அதிசயமே.

நிறைசோவின் நண்பின் கூறிய வார்த்தைகளின் மூலம் சிறந்த பண்புகளை அணிகலனான இவள், என் வாழ்க்கைக் கடலினை நீந்திக் கடக்க உதவும் ஒரு ஓடத்தடுப்பு என உள்மனது அடம் பிடித்தது. என் காதலின் அரங்கேற்றத்தினை நிரோசாவிடம் தெரிவித்துக் கொள்வதாக அவள் நண்பி உறுதியளித்தாள். நாட்கள் வாரமாகியது. அது போல் என்னுள்ளும் அவள் நினைவுகள் வளர்ந்து மரமாகின.

என் லண்டன் பயணமும் நெருங்கியது. பயணத்திற்கான வேலைகளில் மும்முரமாக செயற்படலானேன். நாளை மறு நாள் என் பயணம் ஆரம்பம்......
இப்போது என்னில் ஒரு தலைக் காதல் அவற்றினை இருதலையாக மாற்றும் பொறுப்பு நிறோஸாவின் நண்பியிடமே உள்ளது என்பதால் அவளையும் ஒரு தடவை சந்தித்து விட்டு இறுதியாக கொழும்புக்குச் செல்ல ஆயத்தமானேன்.

அவள் நிறோஸாவிடம் இன்று எப்படியோ இதைச் சொல்லி ஒரு முடிவினை கூறுவதாக வாக்களித்தாள்.
அவளிடம் இருந்து விடைபெற்ற கணங்களிலிருந்து, அவளது பதிலுக்கான தொலைபேசியின் முனகலுக்காக எதிர்பார்த்தவாறு ஏங்கினேன்.
எதிர்பார்த்தவாறு தொலைபேசியில் அவளின் நண்பி குரல்
"நிறோஸாவிற்கு மூச்சுவந்தது (ஆஸ்மா நோய்) ஹொஸ்பிடலில் கொண்டு சேருமுன் அவ மௌத்தாகி விட்டாள்" என்ற பரபரப்பான வார்த்தைகளோடு அவள் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது.

என் கையில் இருந்து பிடிதவறி தொலைபேசியும் என் காதலைப் போல கீழே நழுவி விழுந்து நொறுங்கியது.....

●




தோப்பூர் எம்.யூ.எம். நௌபீஸ்

என்னை மறித்து
ஒரு மலர் சொல்கின்றது
காற்றை சுவாசிக்க கூடாதா என்று
நகரும் பிம்பம் யாரை வரவேற்கிறது
சுய வண்ணத்தை இழந்த முகவரியையா..?

மிதக்கும் ஓவியனவன்
விட்டு விடுங்கள்
காற்று நிற்குமிடத்தில்
அவனை நேசிக்கலாம் ...
அசைந்து வந்த காற்றுக்கு
எப்படி பூக்களையும்
சருகாய் மாற்றிட முடிகிறது?

அப்போது விழித்துக்கொள்கிறேன்
உதிர்ந்த மலர் மீண்டும்
காம்பை புணராதென்று
காற்றுதான் அறிந்திடுமா ?

மடிதலின் முகாரியை
முகவரியற்ற மலரொன்று
முகங்களைத்தேடிக் கொள்ள
இருண்ட கிராமங்களுக்குள்
வீதி வலம் வந்ததுவோ ?
வசந்தங்களைத்தேடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பறை மாவட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தடம்

## அறிமுகக் குறிப்பு

அலியார் றிப்ரன்
உதவி விரிவுரையாளர்

ஒரு சமுதாயத்தின் கலாசார, பாரம்பரிய, சமூக, அரசியல் தொன்மையை வெளிக்காட்டுவன இலக்கியங்களாகும். சங்கம் தொடக்கம் தற்காலம் வரை தமிழ் மக்களுடைய தொன்மையை தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்துப் பூதந்தேவனாருடன் ஆரம்பமாவதாகக் கூறப்படும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறின் மூலமாக இலங்கைத் தமிழ் மக்களுடைய தனித்துவத்தை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

அந்தவகையில், இஸ்லாமியருடைய இலக்கியப் பங்களிப்பையும் பல்வேறு கோணங்களில் பார்க்கும் அதேவேளை, இலங்கையில் இஸ்லாமியர்கள் செறிந்து வாழும் அம்பாறை மாவட்டத்தினுடைய இலக்கியத் தடத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அம்பாறை மாவட்டத்தில் சுமார் இருபது முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை இஸ்லாமியர்களும், தமிழர்களும் மிகவும் நொருங்கிய உறவு கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட இம்மாவட்ட இஸ்லாமியர்களுக்கு இயல்பாகவே இலக்கியம் படைக்கின்ற ஆற்றல் காணப் பட்டது. இவ்விலக்கியப் பாரம்பரியம் கண்டி மன்னர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது என்று வரலாறுகள் கூறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் பலர் 'வரகவி'யாக காணப்பட்டனர். தமக்கு எப்பொழுது பாடுவதற்கு எண்ணம் ஏற்படுகிதோ, அப்பொழுதே பாடிமுடித்து விடுவார்கள். பொருட்கள் வாங்குகின்ற போதும், ஏனையோருக்கு பதில் கூறுகின்ற போதும் கூட இப்புலவர்கள் பாடலிலே பதில் கூறுபவர்களாகக் காணப்பட்டனர். வரகவி செய்கு மதாறுப் புலவர், நற்பிட்டிமுனை யூசுபு புலவர், மருதமுனை சின்னாலிம் அப்பா, சம்மாந்துறை இஸ்மாலெவ்வைப் புலவர் போன்றோர் இம்முறையில் பாண்டித்தியம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்த புலவர்கள் பல்வேறு இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தி இலக்கியங்களைப் படைத்துள்ளனர். சிறுகாப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், ஞான இலக்கியங்கள், தனித்துவச் சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் என்ற வடிவங்களில் இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

மணமங்கள மாலை, ஞானரை வென்றான், சூறாவளிப் படைப்போர், சூறாவளிக் காவியம், முதுமொழி வெண்பா, மஜ்ஹபீன், யுகநடைச்சிந்து போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்துள்ளனர். நற்பிட்டிமுனையைச் சேர்ந்த யூசுபு புலவர் அல்-குர்ஆனின் போதனைகளை 'குறள்' அமைப்பில் தொகுத்தளித்திருப்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இவற்றுள் பெரும்பாலான இலக்கியங்கள் அச்சேறாமை கவனிக்கத் தக்கதாகும். நவீன இலக்கியங்களைப் பொறுத்தவரை சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் என்பனவும் தற்காலத்தில் படைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய விழா முதன்முதல் நடைபெற்ற இடமும் அம்பாறை மாவட்டத்திலேயே உள்ளது. 1966ம் ஆண்டு மருதமுனையில் 'மீலாத் விழா' ஒன்றின் போது 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய விழா' ஆரம்பமானது. அன்று தொடக்கம் 2007ம் ஆண்டு மே மாதம் வரை எட்டு உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் தமிழ் நாடு, இலங்கை ஆகிய நாடுகளில் நடை பெற்றிருக்கின்றன. இதில் குறிப்பிட வேண்டிய விடயம் 'எட்டு இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதற்கும் அடித்தளம் இட்ட இடம் அம்பாறை மாவட்டமே (மருதமுனை)' என்பதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, அம்பாரை மாவட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செல்வாக்கும் ஊன்றி நோக்கத்தக்கது. இங்கு தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலுகின்ற மானவர்களுக்கு 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மரபு' (Islamic Tamil Literrary Tradition) என்ற தலைப்பின் கீழ் இந்தியா,இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற இலக்கிய முயற்சிகள் தொடர்பாக கற்பிக்கப்படுகின்றது.

மேலும், இங்கு தமிழ்ச் சிறப்புக்கலை மாணவர்கள் பலர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இருந்தபோதிலும், இவ்வாய்வுகள் போதமையாகவே உள்ளன. எதிர் காலத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையமாக வைத்து எமது முன்னோரின் முதுசத்தினைப் பாதுகாப்பதோடு, ஆய்வுகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். மிகப் பெறுமதிமிக்க நூல்களை பாதுகாக்கும் நோக்கோடு 'SRI LANKA COLLECTIONS'என்ற பெயரில் சேகரிப்புகள் உள்ளன. இவற்றுள் 'Uwais Collection' ல் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களுடைய அரிதான நூல்களும் காணப்படுகின்றன. இருந்தாலும், இம்மாவட்டப் புலவர்களுடைய படைப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இப்புலவர்களுடைய படைப்புகளைத் தேடிப் பெற்று ஆவணப்படுத்தி வைக்க வேண்டியது பல்கலைக்கழக நூலகத்தின் தார்மீகப் பொறுப்பாகும்.

அடுத்து ஆய்வு முயற்சிகள், பதிப்பு முயற்சிகள், உரை முயற்சிகள், மொழி பெயர்ப்பு முயற்சிகள் போன்றன குறிப்பிடத்தக்களவு நடைபெற்றதாகத் தெரிய வில்லை. ஒரு சிலர் மாத்திரமே இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தவகையில், நிந்தவூர் செய்யது ஹஸன் மௌலானா, முத்துமீரான், சய்ந்தமருது எஸ்.எச்.எம்.ஜெமீல், அலியார் முஸம்மில், மருதூர் ஏ.மஜீட், எம்.ஏ.நு்.மான், பாவலர் பஸீல் காரியப்பர், மருதமுனை ஜின்னா ஷரிபுத்தீன், மருதமுனை மஜீட், சம்மாந்துறை றமீஸ் அப்துல்லா, எ.அலியார், அக்கரைப்பற்று மஜீட், எ.ஆர்.எம். சலீம் போன்றோரின் பணி விதந்து பாராட்டத்தக்கது. ஏனையோரும் இம்முயற்சியில் ஈடுபட வேண்டியது அவசியமாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து அம்பாரை மாவட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகள் விரிவாக நோக்கப்பட வேண்டும். இம்மாவட்ட படைப்பாளிகளுடைய படைப்புகள் இந்தியாவில் ஆய்வு செய்யப்படுகின்றன. அதேநேரம் எம்மவர்கள் இம்முயற்சியில் ஈடுபடாமை துரதிஷ்டமே. எனவே, இம்முயற்சியில் இளம் ஆய்வாளர்கள் அக்கறை கொண்டு, எமது முன்னோரின் இலக்கிய வெளிப்பாடுகளை தமிழ் பேசும் சமுதாயத்திற்கு தெரியப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

"ஒரு சமுதாயத்தின் தொன்மை அச்சமுதாயத்தின் இலக்கியங்களிலே வெளிப்பட்டு நிற்கிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எண்ணெய் இல்லாமலே எரிந்த
என் வாழ்க்கையின் சுடரே
நீ அணைந்து விட்டாய் என எண்ணினேன்
இன்றுதான் புரிந்தது நீ என்னை
அணைப்பதற்கு அணைந்தாயென்று...

அன்று நான் உன்னை சந்தித்ததும்
என்னை நான் உணர்ந்தேனடா
காலத்தின் கோலத்தில் இதயத்தில்
உனக்காய் இட்ட மாக்கோலம்
கலையாமல் உள்ளது
இந்த நிமிடம் வரைக்கும்...

நீ என்னிடம் வராவிட்டாலும்
நின்று சொல்லாவிட்டாலும்
உன் ஊர் தென்றல் வீசுவது
என் பக்கம் தானே!

சுவாசிக்கும் காற்றே
என் வசமாகும்போது
உடல் மறுப்பது நியாயமா..
நீ பாதையில் போகும் போது
நான் பார்வையை தாழ்த்தினேன்
அன்றது புரியவில்லை
தொலைத்த என் இதயத்தை
உன் காலடியில் தேடவென்று..

என்னவனே உன் திரு வதனம்திறந்து
என் காதல் தீயை எப்போது
அணைப்பாய் சொல்லடா ?




நற்பிட்டிமுனை கஸ்பியா மஜீட்



# மனித நேயம்

உறவுகளால்
உடைக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட
ஓலக்குரல் முணங்குகிறது...

ஓசைகளை உருக்குலைத்து
ஊண்மைகளை
உருகச்செய்து
வஞ்சனைபாடும்
நேஞ்சங்களைக் கண்டு...



மனிதநேயம்
மரணிப்பதையும்
ஆன்புகள்
அடிமைப்படுவதையும்
பார்த்து - இன்னும்
ஏதிர்பார்த்த
நாட்கள் எல்லாம்
இடிபாடாய் போன பிறகும்...

நச்சு வார்த்தைகளை
நாக்குகள் வீசும் போதும்
நயவஞ்சகம் நலமா
எனக் கேட்ட போதும்...

விடியும் பொழுதாவது
மனித நேயத்தோடு
பிறக்காதா என எதிர்பார்த்தபடி...

பாலமுனை ஐயூப்

முஸ்லிம் தேசமும் பின் நவீனத்துவமும் என்ற கருத்தியலுடன் வெளிவரும் பெருவெளியின், நான்காவது இதழ் வெளிவந்துள்ளது. தேசியவாத எழுச்சி யினால் எழுந்துள்ள ஆக்கிரமிப்பின் வரைபடங்களில், முஸ்லிம் தேசம் பற்றிய கதையாடலை முன்நிறுத்துகிறது, பெருவெளி. அகிம்சையுடன் அரசியல் உரித்துகளை பெற்றுக் கொள்ள முஸ்லிம் தேசம் துணிவதனை பெருவெளியின் வருகையில் அடையாளப்படுத்தலாம்.



பெருவெளி
159, East Road, Akkaraippattu.
Sri lanka . 0773258899

முஸ்லிம் தேசம் என்ற அடைவை இதர சமூகத்தவருக்கும் தெரியப்படுத்தும் வீச்சை விரிக்க பெருவெளி தவறுவதாக எமக்குப் படுகிறது. இருந்தும் செயற் பாட்டாளர்களின் தன்னம்பிக்கை யையும், விடமுயற்சியையும் நாம் மனங்கொண்டு பாராட்ட வேண்டும். முஸ்லிம் தேசம் என்பது எதன் கருத்தியல் என்பதனை தெளிவாக்குவது அவசியம். எனவே கதையாடல்களில், எதிர்வினைகளில் தமது கருத்தியலை யதார்த்த வாதத்துடன் பேசுவதே தேவை

எம்.பி. ஜலீஸ் மொஹமட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கணாங் குருவியிலும்...?

அன்றென்னாம் பட்சிகளுடன்
பந்தலாய்ப் படரும் பனித்துளி
மறுக்களாய் சூரிய வெளிச்சம் இதுதான்
ஒரு நாளின் முதல் தரிசனம்..

கடகடத்து நீளும் எனது வால் வண்டிப் பயணம்
ஆற்றில் குளித்த ஊசமேனியுடன்
வீடு திரும்ப முடியும்..
உருப்பட மாட்டாய் என்ற தாயின்
அங்கத வேண்டுதல் சாபம் எனும் பெயரில்
நல்லதைச் சொல்ல நட்டமான வார்த்தை..

பச்சோந்திக்காய் தென்னோலைத்துண்டு
பாடசாலை விட எனது பகல் வேலை
தெருவிற் கிடக்கும் பப்பாளி மரம்
உயிர் குவிக்கும் ஆயுத வடிவாய் மாற
எனக்கு இடைவேளை..


சாப்பிடும் போது சல சலப்பு – அறிவுரை
மஞ்சோணக்காய்கள் தோட்டாக்களாய் மாற
வைக்கோற் கற்றைகள் கவசங்களாய் சட்டைக்குள்..
சகோதரிகளிடையே பலத்த பயரிங்
இடையே பிடிபட்ட பச்சோந்தி டயர் இடப்படும்
வெற்றி தோல்வி சொல்லாமலே
விடியும் போது பாடசாலையில் ஒன்றாய்...

பதின் ஐந்து வருடத்தின் பின்
பப்பாளி மரத்துக்கு
மஞ்சோணத்தோட்டா
வைக்கோல் கவசம்
டயரிடப்பட்ட ஓனான்...

ஓ— யுத்தம் தந்த உளவியல் மாற்றமா
என் பிஞ்சு மனதில்
யுத்தமோ வேறு யாரோ பதிவிருப்பது?

நல்லிதைச் சொல்ல நட்டமான வார்த்தை
நல்லியற்கையை
நஞ்சாக மாற்றிய எனக்கு
தூக்கணாங் குருவியிலும்
அதன் மகிழ்விக்கு மின்மினி பலி
என்னும் போது
இன்றெல்லாம் தொடரும் விடிவுக்கான விசாரணை
இது உனக்கும் தான்

றணால் எம்.இஸ்மாயில்
2007.05.03





# சங்க இலக்கியத்தில் பகற்கனவு

## ஓர் உளவியல் நோக்கு

ஆர்.தௌபீக்

வாழ்வின் நிகழ்வுகளை ஏற்க இயலாத சூழலில் உள்ளம் தன்னிச்சையாக ஒரு கற்பனை விளையாட்டில் ஈடுபடுகிறது. உலகையும் வாழ்வையும் உள்ளம் விரும்புமாறு படைத்துக்கொண்டு மனம் தன் போக்கில் மகிழ்கிறது. இதனை பகற்கனவு என உளவியலாளர் கூறுவர். உண்மை வாழ்க்கையில் பெற இயலாத தேவைகளை கற்பனை செய்து மன நிறைவு கொள்ளுதலே இவ்உள்ளப் போக்கின் அடிப்படையாகும். இது எளிமையாகக் கிடைக்கக்கூடிய பொருத்தப்பாட்டு அமைப்பென உளவியலாளர் கூறுவர்.

பகற்கனவு என்பது துயிலில் வரும் கனவோடும் கற்பனையோடும் தொடர்புடையது "கற்பனையில் சில செயற்பாடுகளை மேற்கொள்ளும் பகற்கனவு கனவில் ஒரு வகையாகும்" என்றும் உளவியல் வரையறையில் கற்பனை - பகற்கனவு - கனவு ஆகிய வற்றின் தொடர்பு சுட்டப்படுகிறது. தூக்கத்தில் நிகழ்வது கனவாகவும் விழிப்பில் நிகழ்வது பகற்கனவாகவும் உள்ளது. இரண்டிற்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை என்பதை உளவியல் அறிஞர் யங் குறித்துள்ளார். "கண்படை பெறேஎ என் கனவே" என்றும் மாமூலனாரின் தொடரில் தூக்கம் இல்லாமல் கனவென மனம் கற்பனை செய்தல் குறிக்கப்படுகிறது.

நனவு நிலையில் முழுநிலை தூண்டல்களால் ஏற்படும் கற்பனை எண்ணத்தால் தூண்டப்பட்டு எழும் கற்பனை ஆகிய இரு வகைகளுள் பகற்கனவு இரண்டாம் வகையை சார்ந்தது என உளவியலாளர் குறிப்பர். எனவே கற்பனையின் ஒரு வகையில் பகற்கனவு என்பது அறிய முடிகிறது. கற்பனை ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு நோக்கத்திற்காக செயற்படுத்தப்படும் பொழுது, அது சிந்தனை என்று வழங்கப் பெறுகிறது என ஒவ்வொரு உளவியலாளரும் சிந்தனைக்கும் கற்பனைக்கும் உள்ள தொடர்பினை விளக்கியுள்ளனர். இவை அனைத்தையும் தொகுத்து நோக்கினால் பகற்கனவு என்பது விழிப்பு நிலையை விருப்பமான போக்கில் கட்டுப்பாடற்ற சிந்தனையில் கற்பனை செய்து கனவு போல நினைவு பிம்மங்களை காண்பது என தெளியலாம். பகற்கனவில் செய்கைகளை கற்பனை சிந்தனைகளே மிகுதி. சங்க இலக்கிய பாடல்கள் புலவர் கூற்றாகவும் மாந்தர் கூற்றாகவும் உள்ளன. எனவே கூற்றாக வடிவெடுத்த பகற்கனவு எனக் கூறத்தக்க சிந்தனைகளை மட்டுமே கற்பனை. எனினும் பகற்கனவில் சிந்தனை, பேச்சு, செயல் ஆகிய மூன்றும் குறைந்தது வரலாம். பேச்சு, செயல் ஆகியன இணைந்த முழுமையான பகற்கனவை சங்க இலக்கியத்தில் காண முடியவில்லை.

தலைவியின் முள் போன்ற பற்களையும் அமிழ்தம் ஊறும் அழகிய வாயையும் மணக்கும் கூந்தலையும் குளிர்ந்த கண்களையும் முறுவலோடு செருகிய பார்வையையும் நினைத்தே காண்பதாக தலைவன் கூறுகிறான். துறைக் குறிப்பின் படி அது தோழியிடம் தன் காதலை ஏற்கும்படி பின் நிற்கும் தலைவன் கூறியதாகும். இப்பாடல் தலைவியோடு முன்னரே உறவுண்டு என்பதை தோழிக்கு குறிப்பால் நோக்கம் உடையதாகும். எனினும் "உன்னிற காண்பன் போல்வன்" என்னும் பாட்டின் முதற்தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகற்கனவின் செயல்பாட்டை சுட்டிக்காட்டுவது போல் உள்ளது.

"புணர்த்தாம் போல உணர்ந்த நெஞ்சமோடு" எனும் தொடரில் நிகழாததை நிகழ்ந்தது போல உணர்ந்து தேர் ஏறிச் சென்றும் காலால் நடந்தும் தலைவியோடு மலர் கொய்தும் தலைவியின் அன்பைப் பெற முயல்கிறான். இம்முயற்சிகளிலேயே தலைவியோடு சேர்ந்து விட்டாற் போல "புணர்த்தாம் போல" நெஞ்சம் உணர்த்தலில் உண்மை நிலையில் இல்லாததை ஈடு செய்து கொள்ளும் பகற்கனவின் சுவட்டினைக் காணலாம்.

தன்னை விட்டும் தன்நெஞ்சு மட்டும் தனியே செல்வதாகவும் இயங்குவதாகவும் உரையாடுவதாகவும் திரும்பி வருவதாகவும் தலைவன் தலைவி முதலியோர் சங்க இலக்கியத்தில் பேசுகின்றனர். இத்தகைய எண்ணங்களில் உள்ளத்தின் ஒரு கூறு மட்டும் பிரிந்து செயலுரும். தொடர்பறுதல் உத்தியும் இணைந்துள்ளன. இப்பாடல்களில் நெஞ்சு என்பதை நினைவு எனக்கொண்டால் பகற்கனவின் அமைப்பும் பொருந்தி வருகிறது.

*"சூழ்கம் வம்மோ தோழி பாழ்நாட்டும்*
*ஐபதற வெந்த பாலை வெங்காட்டு*
*அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்*
*வென்ற நெஞ்சு நீடிய பொருளே"*

"தலைவன் தேடிச்சென்ற என் நெஞ்சு இன்னமும் திரும்பி வராமையால் காலம் நீளுதலின் காரணத்தை சிந்திப்போமா தோழி" என இத்தலைவி தோழியிடம் பேசுவதைச் சான்றாகக் கொள்ளலாம். உடன் போக்கில் தலைவனோடு சென்று விட்ட மகளுக்கும் இடைவழியில் நிகழ்வன பற்றி நற்றாயும் செவிலியும் எண்ணிப் பார்க்கும் இப்பாடல்களில் பகற்கனவு போன்ற சிந்தனை தொடர்கள் உள்ளன. "மகள் அச்சம் மிக்க காட்டு வழிகளை கடப்பாள். கன்றுகளை பிரித்துக்கொணரப்பட்ட பசுக்கள் நிறைந்த துன்பம் உறையும் மன்றங்களை உடைய கரத்தை மற்றவர்களின் சிற்றூர்க்குச் செல்வாள், முதலிய பெண்டிர் தனித்துறையும் குடிசையில் தலைவன் தோள் துணையாகவும் துயிலமாட்டாள் கள்வர்கள் காளைகளை பிடித்துக் கட்டும் பொருட்டுத் தட்டும் தன்னுமை முழக்கம் கேட்டு அஞ்சுவாள்" என்று செவிலி எண்ணுகிறாள்.

உடன்போக்கில் தலைவியின் செயல் பற்றிச் செவிலி எவ்வாறு அறிய இயலும் எனவே இது போன்ற நினைவுகளைப் பகற்கனவான கற்பனை சிந்தனைகளாகக் கொள்ளலாம். பொதுவாக பகற்கனவுகள் தன் விருப்பச் சிந்தனை போக்கும் மன நிறைவு காணும் நோக்கும் ஆகும். உளவியலாளர் பகற்கனவை இரு வகையாகப் பிரிப்பர். எல்லா வகையிலும் வெற்றியே அமையும் வெற்றி வீரன் வகை தோல்வியே அமையும் தோல்வி வீரன் வகை என அவற்றைக் குறிப்பர். இவை இரண்டுமின்றி மூன்றாம் வகையான பகற்கனவையும் உளவியலாளர் சிலர் குறிப்பதுண்டு. இவ்வகை "எல்லா விதமான தொல்லைகளும் இருப்பதாகக் கற்பனை செய்து" கொள்ளும் போக்கு உடையதாகும். "தனக்கு அல்லது தன்னை சார்ந்தவர்களுக்கு பேராபத்துகள் ஏற்படும் என்று கற்பனை செய்தல் என்றும் தொடர்ந்து தவறாமல் திட்டமிட்டு கவலைப்படுதல்" என்றும் அதனை குறிப்பர். மேலே பாட்டில் செவிலித்தாய் தன்மகள் தூங்க இடம் கிடைத்ததும் தூங்காமல் தவிப்பாளோ என எண்ணுகிறாள். இச்சிந்தனையில் மூன்றாம் வகை பகற்கனவின் இயல்பு உள்ளது.

பொருள்வயின் பிரிய வேண்டிய தலைவன் பிரிவின் போது நிகழும் துன்பங்களை நினைத்துப் பார்க்கின்றான் "அன்புடைய தலைவியுடன் இன்றுமட்டும் இருக்கலாம் :நாளையே பிரிதல் வேண்டும்" என



அவன் சிந்தனை தொடங்குகிறது. "புதரெனப் படர்ந்த மூங்கில்களின் துளையில் காற்று வந்து நுளைய யேனின் குழல் போல ஒலிக்கும்: தேக்க மரங்கள் செறிந்த பாறைகள் உயர்ந்த வழியில் அம்பு கூட்டை திறந்து வைத்தால் மலர்ந்த இழுப்பை மரத்தின் பூங்கொத்துக்கள் உதிர்ந்து பரவிய மழை துறந்த சிற்றூரில் தூங்க வேண்டும்: காதலியின் அறிவு கலங்கிய துன்பப் பார்வையை நினைத்துத்தாங்குதல் வேண்டும் என மறு நாள் நிகழ உள்ளதை மதி நுட்பமாக நினைத்துப் பார்க்கின்றான். மனத்திரையில் ஓடும் காட்சிக்குத் தொடர் விளக்கம் அளித்தல் போல எண்ணுகின்றான். எதிர் வருவதை பற்றிய அச்சமும் கவலையும் மிக்க இயலாமை உணர்வில் பிறக்கும் பகற்கன்வின் தன்மை இந்நினைவுகளில் உள்ளது. இடைச்சுரத்தில் தலைவன் தன் உள்ளத்தோடு பேசுகிறான் "உள்ளமே! நீ விழைந்தவாறு திரும்பி செய்க ! தலைவியின் குவளை இதழ் அணைய கண்ணிமைகள் கண்ணீரில் நனைந்து கலை உள்ளுதோரும் வெப்பத்தால் மீண்டும் உலர்கின்றன. சிலவாகிய வளைகளும் கழலத் தலைவி உடல் மெலிந்துள்ளதால் பூவெல்லாம் வீழ்ந்த கொடி போலப் புன்மை ஆனாள். அவளைச் சென்று கண்டு மறவாது இருப்பாயாக!" எனப் பேசுகின்றான். இவற்றினை தோல்வி வீரன் கனவு வகையைச் சார்ந்தனவாகக் கருதலாம் தலைவன் துன்பத்தோடு காத்திருக்கும் தலைவியின் உருவத்தை எண்ணிப் பார்க்கின்றான். தலைவி "தோழி ! வேலன் வெறியர் களத்துச் சிதறிய பூக்கள் போல பூவுதிர்ந்த முல்லை பரப்பில்கதிரவன் மறைகிறான். இம்மாலைக் காலத்தும் அவரென்னை நினையார் எனத் தோழியிடம் கூறுவதாகத் தலைவன் நினைக்கின்றான். தலைவியின் துன்பம் தீர தேரினை விரைந்து செலுத்தவும் வேண்டுகிறான். தன்னை எதிர் பார்த்துக் காத்திருக்கும் தலைவி, அவன் தோழியிடம் பேசும் பேச்சினையும் தலைவன் எவ்வாறு அறிதல் கூடும் ? கற்பனை சிந்தனையில் கனவு போல கண்ட காட்சிகளை தேர்ப்பாகனிடம் கூறுகின்றான்.

தலைவி வருங்கொல் தோழி நம் இன்னுயிர் துணையெனத் தோழியிடம் கூறுதலையும் வளை செறித்தலையும் வாசல் நோக்கி வருந்துதலையும் தலைவன் நினைத்துப் பார்க்கின்றான். இத்தகைய கனவலைகள் தலைவனின் உள்ள விழைவிற்கு ஏற்ப அமைகின்றன. தலைவியின் துன்பத்தை நினைவு படுத்தலால் தேர்ப்பாகனையும் விரைந்து தேர் செலுத்துமாறு தூண்டவும் முடிகிறது. இக்கனவு தலைவனுக்கு உள நலத் தற்காப்பு வழியமைப்பாகவும் ஆகின்றது. இவ்வகையான கனவு நிலை சிந்தனைகள் வெற்றி வீரன் கனவு வகையை சார்ந்தனவாக உள்ளன. சூழ்நிலையின் காரணமாக கொள்ளுகின்ற வெற்றியின் காரணமாக இத்தகைய பகற் கனவுகள் தோன்றுகின்றன என உளவியலாளர் குறிப்பிடுவர்.

கார்பருவம் வந்தும் பாசறை தொழில் முடியாமையினால் கவலையுற்ற தலைவன் மனக் கண்ணில் தலைவியின் உரவெளித் தோற்றம் தெரிகின்றது. "நீயும் என்னுடன் இரு பாகற்றொழில் புரியட்டும். பின்னர் நாட்டிற்கு சென்று இனிய வாழ்வு காண்போம்" என்று கூறுகின்றான்.

"முல்லை நாறுங் கூந்தல் கமழ கொள
நல்ல காண்டவ மாஅ யோய
பாசறை அருந்தொழில் உதவி நம்
காதல் நன்னாட்டுப் போதரும் பொழுதே"

தலைவி எதிரே உருவோடு நிற்பது போல அவளோடு பேசி மகிழ்கிறான். இது பேச்சும் கலந்த பகற்கனவாக உள்ளது. பகற்கனவுகள் மூன்றியல்பினை பெற்றுள்ளமையை உளவியலாளர் குறித்துள்ளனர். அவை பகற்கனவுகள் உடனடிச் சூழ்நிலையுடன் கொள்கின்ற தொடர்பு வழுவற்றதாக இருக்கும்போது ஏற்படுதல்,
மன நிறைவினை அளித்தல் நமது வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கினை வகித்தல் ஆகியவைகளாகும். தலைவனுக்கு இடைவழியில் மனக்கண்ணில் தலைவியின் உருவம் கண்வரத் தோன்ற அவ்வுருவோடு அவன் பேசுவதாக உள்ள பாடல்கள் வேறு சிலவும் உள்ளன. தலைவன் முன் தலைவி தெளிவாக தோன்றுவது தலைவனின் கற்பனையாகும். அவ்வுருவோடு உரையாடுதல் பகற்கனவின் வெளிப்பாடாகும். இடைச்சுரத்து அழுங்கும் இத்தலைவர்களுக்குப் பயணத்தில் வெருப்புள்ளமையினால் வழுவான ஈடுபாடில்லை, இந்நிலையில் தற்காலிக ஆதரவாகப் பகற்கனவாகத் தலைவியின் உருவம் தெரியக் காண்கின்றான்.

"கற்பனையில் ஈடுபடும் போது உள்ளம் ஓய்வு பெருகிறது. கற்பனையில் இருந்து விடுபட்டு எமது சிக்கல்களுக்கு நாம் அதிகரித்த சக்தியோடு திரும்பி வருகின்றோம்" என உளவியலாளர் பகற்கனவின் பயனை விளக்குகின்றார். பகற்கனவின் வரையறைகளோடும் சங்க இலக்கியத்தில் பகற்கனவெனக் கருதத்தக்க தற்புனைவுச் சிந்தனைகளை பொருத்தி நோக்குவதோடு இவை உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கும் போக்குடையன என்பதே அடிப்படையாகத் கருதத்தக்கதாகும். எனவே சங்க இலக்கியத்தில் சூழ்நிலையின் கடுமையையும் உண்மையையும் மறந்த விருப்பான போக்கில் ஓடும் கற்பனை ஓட்ட எண்ண அலைகளை வைத்தே அவற்றை பகற்கனவாக அடையாளம் காண வேண்டியுள்ளன.






தென்கிழக்கு பல்கலைகழகத்தின் (தமிழ்ச் சங்க) நிஷ்டை இதழானது பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களின் ஆக்கத்திறன்களை வெளிக் கொண்டுவரும் வெளியீடுகளில் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகிக்கிறது. எனினும் இச்சஞ்சிகை தொர்பான அக்கரை, பிரக்ஞை மாணவர்களிடத்தில் பூரணமின்மை எதிர்காலத்தில் மாணவர்களின் ஆற்றலில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும் அபாயமுள்ளது. எனினும் இச்சஞ்சிகையானது பல்கலைக கழகத்தினுள் மட்டுமின்றி, அதனைத் தாண்டிய பகைப் புலத்திலும் தன்னுடைய பங்களிப்பை செய்வதற்கு துணிகிறது. இந்த முயற்சியை பல்கலைக்கழக மாணவ சமூகம் ஆத்மார்த்தமாக உணர்ந்து கொண்டு தங்களது படைப்பாற்றல்களையும் பதிவு செய்வதற்கும், ஒத்துழைப்பு வழங்கவும் கடப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகம் என்பது வெறும் சம்பிரதாயத்திற்கான கல்வித்தளம் மட்டுமல்ல என்ற விடயம் சகலரது உள்ளத்திலும் உதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் ஆளுமை மிக்க சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப முடியும்.

எஸ்.எச்.எம்.எம். சுல்பி



நிஷ்டை அனுப்பிவைத்தமைக்கு நன்றிகள். பல்கலைக்கழக இதழ் என்ற படியால் எதிர்பார்க்கை மிகைத்திருந்தது. எதிர்வினையென்ற அடிப்படையில் இரண்டாவது இதழில் கவிதைகள் மிகைத்துவிட்டன என்பது கவனிக்கத்தக்கதாக இருந்தது. எனினும் இறுக்கமான, யதார்த்தம் மிகுந்த கவிதைகளே அனேகமாக இருந்தன என்பதனை சிறப்புடன் சுட்டுகிறேன். இன்றைய இளம் படைப்பாளிகளிடத்தில் கவிதைத்தாகம் மிகையாக கனன்று கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதழின் தரம் கருதி படைப்புகளில் பன்முகத்தை காட்ட ஆவன செய்ய செய்ய வேண்டும்.

பிரியதர்சினி, நீர் கொழும்பு.

தங்களது பல்கலைக்கழக வெளியீடான நிஷ்டை இதழைப் படிக்கும் வாய்ப்பை பெற்றேன். சிறு சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது எத்துணை சிரமம் நிறைந்த காரியம் என்பதை அனுபவித்தவன் என்றபடியினால், இரண்டாவது இதழின் வரவை வாழ்த்துகிறேன். சிற்றிதழ்களை தொடர் வரவுச் சஞ்சிகையாக புரிணமிக்க உசிதமான சூழலை தோற்றுவிக்க நடவடிக்கைகள் செய்யும்போதே இதழின் தரத்திலும் கவனங்களை குவிக்கலாம். நிஷ்டை தொடர்ந்து மாட்சிமையுடன் வெளிவர வாழ்த்துகிறேன்.

எம்.சீ. நஜிமுதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று..
உன் பார்வை வாளால்
வெட்டுண்ட இதயம்
அன்புக் கயிற்றில் கட்டுண்டுதான்
போனபின்
என் வாழ்வு கண்டது இன்னொரு உதயம்..

இன்று உதட்டில் மட்டும்
உவகை பூட்டி
கண்களிலே கத்தி காட்டி
குழப்புகிறாய் இது என்ன மாயம்..
அதனால் என் நெஞ்சில்
புதியதொரு காயம்..
அன்பிற்கும் உண்டோ
அடைக்கும் தாள்...
இது ஆன்றோர் ஈன்ற வாக்கு
அது வரவும் உண்டோ
குறிப்பிட்ட நாள்
இதைக் கூறுவது என் போன்றோர் நாக்கு...

வலித்தாலும் கூட சந்தோஷித்தேனே
அந்தக் தருணம்..
காரணம் புரிந்த போது
உள்ளத்திலே ஆறாத ரணம்...
வலிக்கான அர்த்தம்
இப்போதுதான் புரிகிறது
என்னை - நீ
அறிந்து கொள்ளவில்லை
அரிந்துதான் கொல்கிறாய்
என்று....



## அன்பிற்கும் உண்டோ ...

கவிநிலா எச்.எப். றிஸ்னா

## புன்னகைக்கு என்ன விலை ?

நெஞ்சிலே நஞ்சுவைத்து
நாவிலே நறுந் தேன் பூசி
வஞ்சகம் ஒன்றே குறியாய்
வாழ்கின்ற மனித குலமே சிரிப்பில்
கஞ்சனாய் வாழ்வதேனோ
சுயவனாய் மாறுதல் நன்றோ

இரக்கமே இன்றி மனதில்
இறைவனை மறந்து நாளும்
அரக்கனைப் போல வாழும்
அன்பது இல்லா நெஞ்சம் - நீர்
துறக்கவே வேண்டும் கேளீர்
துயரது பனியாய் கரையும்

இன்னல்களும் எது வந்தாலும்
எதனையும் தாங்கும் நல்ல
திண்ணிய உள்ளம் கொண்டோரை
தேடியே கண்டு கொள்ளீர் நல்ல
புண்ணியம் செய்கின்றோரின்
புன்னகைக்கு ஏது விலை

எண்ணையில் போட்டதுமே
எகிறாடும் அப்பளம் போல்
என்னமாய்க் கொதிக்கிறீர்கள்
ஏனிந்த கடு கடுப்பு நீங்கள்
புன்னகை செய்தா லந்த
புன்னகைக்கு என்ன விலை

என்னதான் வன்மையுள்ள
இதயம் இருந்திட்டாலும்
சின்னதாய் புன்னகை செய்தால்
சிதறியா போகும் கொள்கை- நீங்கள்
புன்னகை செய்தா லந்தப்
புன்னகைக்கு என்ன விலை...?


கன்கல் இக்ராமா





நவீன உலகின் சவால்களை
வெற்றிகொள்ளும் கல்வித் தகமை
பாடசாலை மாணவர்கள் முதல் தொழில் புரிபவர்கள் வரை சகல தரப்பினருக்கும் தேவையான எல்லா வகையான தொழில் நுட்பப் பயிற்சி நெறிகளுக்கும் நாடுங்கள்,

தொழில் நுட்பத்துறையின் முன்னோடி, சவால்களின் சக்தி
ஸ்மிக் டெக் ஸோன்



பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள்
- O/L மாணவர்களுக்கான ICT (Information Communication Technology)
- A/L மாணவர்களுக்கான GIT (General Information Technology)
- 6,7,8,9 ம் ஆண்டு மாணவர்களுக்கான Certificate in Office Automation
- மொழியியல் (English & Sinhala) மற்றும் ஏனைய பாடநெறிகள்

Poineer of the Technical Field, Power of Challenges
SMIC TEC ZONE
= All Kind of Technological Services & Accessories =
No: 22, Ampara Road, Sammanthurai, Sri Lanka.
Tel: (+94) 0602 676 878,. Hotline: (+94) 773741297
E-mail : smic.teczone@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Sangam

South Eastern University
of Sri Lanka



# 2008

**January**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**February**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 26 | 29 | |

**March**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 06 | 07 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 13 | 14 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 20 | 21 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 27 | 28 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

**April**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 01 | 02 | 03 | 04 | 05 |
| 06 | 07 | 08 | 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

**May**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**June**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**July**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**August**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 04 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

**September**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

**October**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**November**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

**December**

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |


# UTHUMANIYA STORES

17/1, Central Road, Sammanthurai, Sri Lanka
hello : 094 672260047 Mob : 077 3521040
Res. 094 672260185 Fax : 94 672260185 - e-mail : ilyas.lk@hotmail.com

Distributors in
*DIGI Weigh System. (Pvt) Ltd.*
*East West Marketing (Pvt) Ltd.*
*Ceylon Agro Industries Ltd.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Grafix by shumi